விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 20 திங்கட்கிழமை (07.10.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 292

## புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு வெளியாகியது வட மாகாணத்தில் முதலிடம் பெற்ற மாணவர்கள்


யோகநாதன் ஆருஷன்
புள்ளிகள் - 196
யாழ்.இந்து ஆ.பாடசாலை


கேசவன் தர்சன்
புள்ளிகள் - 194
ஜோன் பொஸ்கோ வித்தி.


ஜெறோம் யோய்சன்
புள்ளிகள் - 193
பரு.தும்பளை சி.வித்தி.


ரகுதனன் அபினயன்
புள்ளிகள் - 193
முள்ளியவளை வி.ஆ. பாடசாலை

(யாழ்ப்பாணம்)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியான நிலையில், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலைமாணவன் யோகநாதன் ஆருஷன் 196 புள்ளிகள் ▶23

## மொட்டு சின்னத்திலே போட்டியிட்டு பாரிய வெற்றியும் பெறுவோம்

### மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாம் தாமரை மொட்டு சின்னத்திலேயே போட்டியிட்டு, பாரிய வெற்றியை பெறுவோம் என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ▶23



# நிபந்தனையின்றி கோத்தாவை ஆதரிக்கிறது சுதந்திரக்கட்சி

## நாளை மறுதினம் புரிந்துணர்வு உடன்படிக்கை

(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷவையும் தாமரை மொட்டு சின்னத்தையும் எந்த நிபந்தனைகளுமின்றி ஆதரிக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் இந்த அறிவிப்பை விடுத்தார்.**

ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவையும், தாமரை மொட்டு சின்னத்தையும் எந்த நிபந்தனைகளுமின்றி ஆதரிக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். கட்சியின் மத்தியகுழு கூட்டத்தில் இந்த அறிவிப்பை விடுத்தார்.

தாமரை மொட்டு சின்னத்தை மாற்ற வேண்டுமென மைத்திரி பலமுறை தெரிவித்திருந்த நிலையில், தனது நிலைப்பாட்டை கைவிட்டு, கோத்தபாயவை ஆதரிக்கும் முடிவை எடுத்துள்ளார். இதன்படி சு.க இரண்டு ஒப்பந்தங் ▶23

## பொஸ்கோவில் அதிகளவிலான மாணவர்கள் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 2019ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 258 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 171 மாணவர்கள் சிறந்த பெறுபேற் ▶23

## சிவாஜிலிங்கம் கட்டுப்பணம் செலுத்தினார்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக ரெலோவைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சார்பில் நேற்று தேர்தல் ஆணைக்குழுவில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. (ஞா)

## அமைச்சுக்களின் செலவினங்களை குறைக்க அறிவுறுத்தல்

(கொழும்பு)

அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செலவினங்களை 10 வீதத்தால் குறைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றறிக்கை ஒன்றின் ஊடாக திறைசேரியின் செயலாளர் ஆர்.எச்.எஸ் சமரதுங்க இந்த ▶23

## தந்தையை கொலைசெய்ய பாதுகாப்பு அளித்தவர் கோத்தா

### ஹிருணிகா தெரிவிப்பு



(கொழும்பு)

கோத்தபாய மற்றும் மகிந்த ராஜபக்ஷவினுடைய கொலைப் படலத்தில் நானும் பாதிக்கப்பட்டுள்ளேன் என பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார். ஐக்கிய ▶23

## கணவன் மனைவி மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

### தருமபுரம் பகுதியில் சம்பவம்

(தருமபுரம்)

சட்டவிரோத செயல்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதாக தெரிவித்து தருமபுரம் பகுதியில் கணவன் மனைவி மீது கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தருமபுரம் கல்லாறு பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று மாலை நுழைந்த 6 பேர் கொண்ட ▶23

## முல்லையில் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பாரவூர்தி - மோட்டார் சைக்கிள் மோதி ஏற்பட்ட விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ▶23

## கோத்தபாய ராஜபக்சவின் குடியுரிமை; சவால் விடுத்தவர்களுக்கு கொலை அச்சுறுத்தல்

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்சவின் இலங்கை குடியுரிமையை சவாலுக்குட்படுத்தி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்த சிவில் செயற்பாட்டாளர்களான காமினி வியாங்கொட மற்றும் பேராசிரியர் சந்ரகுப்த தெனுவர ஆகியோருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்சவின் இரட்டைக் குடியுரிமை சான்றிதழ் முறைகேடான வகையில் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதனை அடிப்படையாக வைத்து, வழங்கப்பட்ட கடவுச்சீட்டு, மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியனவற்றை ரத்துச் செய்து, கோத்தபாய ராஜபக்சவின் இலங்கை குடியுரிமையை ஏற்றுக் கொள்ள இடைக்கால உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி, சிவில் செயற்பாட்டாளர்களான காமினி வியாங்கொட மற்றும் பேராசிரியர் சந்ரகுப்த தெனுவர ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவை விசாரித்த மேன்முறை ▶23

## ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று தாக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று தாக்கல் செய்யப்படவுள்ளன.

காலை 9.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரையான 2 மணித்தியால காலப் பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வேட்புமனு தாக்கல் செய்யும்போது வேட்பாளர்கள் தங்களது சொத்துக்கள் ▶23

## 41 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தினர்

### இருவர் தமிழ் வேட்பாளர்கள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு 41 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தகவல் வெளியிட்டுள்ளது.

நவம்பர் 16ஆம் திகதி நடக்கவுள்ள ▶23

# வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சிவதொண்டன் திருமுறை மண்டபத்தில் சனி, ஞாயிறு நாட்களில் இலவசமாகச் சிவதொண்டன் நிலைய அனுசரணையுடன் இடம்பெறும் வகுப்பில் சேர விரும்பும் ஆர்வலர்கள் (மாணவர்கள்) நாளை விஜய தசமி தினத்தன்று சிவதொண்டன் நிலையத்தில் மாலை 4.00 மணிக்கு வருகை தருமாறு யாழ்ப்பாணம் அகில இலங்கைத் திருமுறை மன்றம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஞா)


நாமும் நமக்கோர் கற்க — நலியாக் கலையுடையோம் கசடற

## ராகஸ்வரம் கலைமன்றத்தின் கலை, கல்வி வகுப்புக்கள்

வித்தை சிறக்கும் விஜயதசமி தினமாகிய 08.10.2019 செவ்வாய்க் கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பஸ்தரிப்பு நிலையத்திற்கு அண்மையில் உள்ள CSLMRD - இல 261/2 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றது. உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

**துணைப்பாடங்கள்**

- ஓகன்
- ஆர்மோனியம்
- ஒக்டோபாட்
- றம்ஸ்
- கொங்கட்றம்ஸ்
- கிற்றார்
- மிருதங்கம்
- தபேலா
- வயலின்
- வீணை
- புல்லாங்குழல்
- வாய்பாட்டு
- நடனம்
- ஓவியம்

**சிறப்புப்பாடங்கள்**

- முரண்பாட்டு நிலைமாற்ற கற்கைநெறி
- புகைப்படக்கலை
- சிங்களம்
- ஆங்கிலம்
- ஊடகவியல்
- ஆயுர்வேத மருத்துவம்
- யோகாசனம்
- நாடகமும் அரங்கியலும்
- தரம் 01 - 04 வரையான மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி
- தரம் 05 - 10 வரையான மாணவர்களுக்கான தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் கனணி வகுப்புக்கள்
- G.C.E O/L மாணவர்களுக்கான சகல பாடங்களும் துறைசார்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

(C-7807)

**CSLMRD** (இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்)

261/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இல- 0776510375
0762963944


# விஜய தசமி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண். வடகிழக்கு கலட்டி வீர கத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணிக்கு மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை என்பன நடைபெற்று தொடர்ந்து மானம்பூ உற்சவம் நடைபெறவுள்ளது. (ஞா)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


### தம்மைப் புறக்கணித்ததாக

# கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் கவலை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று முன்தினம் 5ஆம் திகதி தமிழ் அரசியல் கட்சிப்பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராயப்பட்ட விடயம் தமக்குத் தெரிவிக்கப்படவில்லை என கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எடுக்கின்ற முடிவு என்பதற்குள் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும் அடங்குவர்.

எனினும் அரசியல் கட்சிகளுடனான சந்திப்புத் தொடர்பில் தம்முடன் எந்தவித கருத்துப் பரிமாற்றத்தையும் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் செய்யவில்லை.

சந்திப்பு முடிந்த பின்பு நேற்று 6ஆம் திகதி மாலை 5 மணியளவிலேயே யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு சந்திப்பு நடந்ததாக தெரிவித்தனர்.

இது எமக்கு மிகுந்த கவலையைத் தந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஞா-10)

# தீக்காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் உயிரிழப்பு

## யாழில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் சிகிச்சைப் பலனின்றி நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த 21 வயதுடைய கரோன் விதுஷாயினி என்ற பெண் பிள்ளை ஒன்றின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில், கடந்த 28ஆம் திகதி சனிக்கிழமை அன்று இரவு வீட்டில் விறகு அடுப்பில் சமைத்துக் கொண்டிருக்கும் போது அடுப்பிற்கு மண்ணெண்ணெய் ஊற்றியபோது திடீரென போத்தலில் தீப் பற்றிக் கொண்டது.

பதற்றத்தில் போத்தலைக் கைதவறி விட்டபோது குறித்த பெண் மீது தீப்பற்றிக் கொண்டது. இதனால் தீக்காயங்களுக்குள்ளாகி இரவு 10 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா-78)


## காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் யாழ்கிளை

### புதிய அனுமதியும் நாள் வகுப்பும்

கிழவன்காடு கலாமன்றத்தின் யாழ் கிளையில் எதிர்வரும் 08.10.2019 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (விஜயதசமி அன்று) பி.ப 5.00 மணிக்கு புதிய அனுமதியும் நாள் வகுப்பும் நடைபெறவுள்ளதால் சகல மாணவர்களும் புதிதாக இணைய விரும்புவர்களும் அதில் இணைந்து கொள்ளவும்.

பதிவாளர் : இல , 428,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் கோவில் அருகாமை)
077 578 6638

(C-7798)

## NATIONAL CERTIFICATE

### PHARMACY TECHNICIAN (NVQ Level 4)

### மருந்தக தொழில்நுட்பவியலாளர் கற்கைநெறி

வட இலங்கை மருந்தியலாளர் சங்கத்தினால் NAITA நிறுவனத்தின் Pharmacy Technician (NVQ Level 4) கற்கைநெறி எதிர்வரும் கார்த்திகை மாதம் 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப் பட்டப்படிப்பு பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் மருந்தகங்களில் நான்கு வருடங்களுக்கு மேலாக தொடர்ந்தும் பணிபுரியும் அனுபவம்மிக்கவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதுடன் அவர்கள் NAITA நிறுவனத்தால் எதிர்வரும் 2020ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடாத்தப்படவிருக்கும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

மேற்படி பயிற்சிநெறியில் இணைந்து கொள்வதற்கு தகுதியானவர்கள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப் பப்படிவத்தினை பூர்த்தி செய்து Nehru sir, Pharmacist Exam Co-ordinator, Jaffna College, 464, Hospital Road, Jaffna. என்ற முகவரிக்கு இம்மாதம் 25ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தபால் மூலமாகவோ / நேரடியாகவோ அனுப்பி வைக்கவும். விண்ணப்பப்படிவங்கள் பரிசீலனை செய் யப்பட்டு கார்த்திகை மாதம் முதற்கிழமை இப்பயிற்சி நெறிக்கான நேர்முகத்தேர்வும் கருத்தரங்கும் NAITA நிறுவனத்தினால் யாழ்ப்பாணக் கல்லூரியில் நடாத்தப்படும்.

#### மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முழுப்பெயர் :-
2. தேசிய அ.அ.இல :-
3. தொலைபேசி இல :-
4. மின்னஞ்சல் முகவரி :-
5. நிரந்தர முகவரி :-
6. தற்போது பணிபுரியும் மருந்தகத்தின் பெயர் / விலாசம் :-
7. உங்களது தொழில் அனுபவம்

திகதி (560) கையொப்பம்



# பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வச்சந்நிதி கோவிலடியைச் சேர்ந்த சாரங்கன் - ஜெயதர்சினி தம்பதிகளின் தவப்புதல்வி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி

## செல்வி சாரங்கன் திகழினி (தேனுசா) இவள்

2019ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். அவரை கல்வியில் மேலும் பல சாதனைகளை படைக்க வாழ்த்துவதோடு அவருடன் சித்தியடைந்த மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்

மேலும் பாடசாலை அதிபர் மற்றும் அவரை பயிற்றுவித்த ஆசிரியர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

பாராட்டி வாழ்த்துவோர்
மகாதேவஐயர் குடும்பம், செல்வச்சந்நிதி கோவிலடி, தொண்டைமானாறு.

(C-7806)

## டி.கே.பி.தசநாயக்கவிற்கு உயர் பதவி; காணாமல் போனோர் பற்றிய அலுவலகம்

# கடும் அதிருப்தி!



## ◆ அரசின் மீது பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கை இழப்பர்

## ◆ ஜனாதிபதிக்கு இன்று விசேட கடிதம் - சாலிய பீரிஸ்




(கொழும்பு)

**கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரி எனக் கருதப்படும் முன்னாள் கடற்படைப் பேச்சாளர் டீ.கே.பி. தசநாயக்கவிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவி உயர்வு வழங்கியமை குறித்து காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் கடும் அதிருப்தி வெளியிட்டது.**

2008-2009 இல் கடற்படையைச் சேர்ந்த குழுவொன்றால் கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தில் முக்கிய சந்தேகநபர் எனக் கருதப்படும் டீ.கே.பி. தசநாயக்கவிற்கு ஜனாதிபதி பதவியுயர்வு வழங்கினார்.

பாரிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட அதிகாரிக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டமை குறித்த தனது ஆட்சேபனையை தெரிவிக்கும் கடிதமொன்றை ஜனாதிபதிக்கு இன்று அனுப்பி வைக்கவுள்ளதாக காணாமல்போனோர் குறித்த அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட அதிகாரிக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டமை இந்தச் சம்பவம் குறித்த சாட்சிகளுக்கு அச்சமூட்டும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

குறித்த அதிகாரி தொடர்ந்தும் கடற்படையில் பதவி வகிப்பது சாட்சிகளுக்கு கடும் ஆபத்தை ஏற்படுத்தலாம். சந்தேகநபர்களுக்கு பதவியுயர்வை வழங்குவது பிழையான செய்தியை தெரிவிப்பதாக அமையும் என சாலிய பீரிஸ் கூறினார்.

இது தொடர்பில் காணாமல் போனோர் குறித்த அலுவலகம் முன்வைத்த பரிந்துரைகளை அரசாங்கம் அலட்சியப்படுத்தியுள்ளமை அலுவலகத்தின் பணிகளைக் கடினமாக்கியுள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கத்தின் மீது பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கை இழப்பார்கள் எனவும் சாலிய பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

தங்கள் விவகாரங்களை அரசாங்கம் முக்கியமானதாகக் கருதவில்லை எனப் பாதிக்கப்பட்டவர்கள் கருதக்கூடும் எனத் தெரிவித்த சாலிய பீரிஸ் கடற்படையினரால் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரமே இலங்கையின் காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த விவகாரத்தில் மிகவும் பிரச்சினைக்குரியது எனவும் தெரிவித்தார்.

சந்தேக நபர்களாகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு நீதிமன்ற வழக்குகளை எதிர்கொண்டுள்ளவர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது என சாலிய பீரிஸ் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கோத்தபாயவின் இயலாமையே 'மார்ச் 12' மாநாடு புறக்கணிப்பு

### சஜித்துடன் பகிரங்க விவாதத்திற்கு அழைப்பு




(கொழும்பு)

பொது மேடைகளில் தனது கருத்துக்களை சுயமாகக் கூற முடியாதமையாலேயே நேற்று முன்தினம் சனிக்கிழமை "மார்ச் 12" அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில்கோத்தபாய ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவித்த அமைச்சர் அஜித் பி பெரேரா, சஜித் பிரேமதாஸவுடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இலத்திரனியல் திரையின்றி மேடைகளில் பேசத் தெரியாது.

ஒருவேளை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் நாட்டிற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் கூட அவரால் சுயமாகப் பேச முடியாது. தன்னுடைய கொள்கைகளைப் பிறிதொருவர் தயாரித்துக் கொடுத்து அவற்றைப் பார்த்து வாசிக்கும் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு தகுதியானவரா? என்பதே எமது பிரதான கேள்வியாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ═ மகிந்த, சமல் முன்னிலையில் ═

## வேட்பு மனுவில் கைச்சாத்திட்டார் கோத்தா



(மிரிஹான)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ மிரிஹான பகுதியில் அமைந்துள்ள அவருடைய வீட்டில் வைத்து நேற்றுக் காலை வேட்பு மனுவில் கைச்சாத்திட்டார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கோத்தபாய ராஜபக்ஷவை இலங்கைப் பிரஜையாக ஏற்றுக் கொள்வதை தடுத்து உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட "செட்டியோராரி" எழுத்தானை மனு உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதையடுத்து அவருக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தடைகள் நீங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கோத்தபாயவுக்கு எதிராக வழக்கு சந்திரகுப்தவுக்கு உயிர் அச்சுறுத்தல்

(கொழும்பு)

கோத்தபாயவுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த பேராசிரியர் சந்ரகுப்த தேனுவரவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிக்கும் தரப்பில் இருந்தே இந்த உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சந்திரகுப்த தேனுவர, இலங்கையில் நீண்ட காலமாக சமூக அரசியல் செயற்பாட்டாளராக இருந்து வருகிறார்.

இந்நிலையில் கோத்தபாயவின் இரட்டைப் பிரஜாவுரிமை பிரச்சினையை முன்வைத்து அவரும் சமூக செயற்பாட்டாளர் காமினி வியாங்கொடவும் வழக்குத் தாக்கல் செய்தனர்.

எனினும் வழக்கின் தீர்ப்பு கோத்தபாயவுக்கு சார்பாக அமைந்து விட்டது. இதனையடுத்து தமக்குப் பலர் தொலைபேசியில் உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாக சந்திரகுப்த தேனுவர தெரிவித்தார்.

தாம் வாகனம் செலுத்திச் சென்ற வேளையில் தம்மை முந்திச்சென்ற ஆட்டோ சாரதி ஒருவரும் உயிர் அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் இடம்பெற்றதாக தேனுவர தெரிவித்தார்.

இந்நிலையில் பொலிஸாரின் பாதுகாப்பை அவர் கோரினார். (இ-7)

# 203 ஓட்டங்களினால் இந்திய அணி வெற்றி



தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 203 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்க அணி, இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 502 ஓட்டங்களையும், தென்னாபிரிக்க அணி, 431 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டன.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய இந்திய அணி 323 ஓட்டங்களை பெற்றிருந்த போது ஆட்டத்தினை இடைநிறுத்தியதுடன், 395 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்தது.

பதிலுக்கு 395 என்ற வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

பந்து வீச்சில் இந்தியா சார்பில் மொகமட் சமி 5 விக்கட்டுக்களையும், ஜடேஜா 4 விக்கட்டுக்களையும் வீழ்த்தியிருந்தனர்.

# தமிழக வீரர் அஸ்வின் புதிய சாதனை

அதிவேகமாக 350 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற சாதனையை அஸ்வின் படைத்துள்ளார்.

தென்னாபிரிக்க அணி, இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 502 ஓட்டங்களையும், தென்னாபிரிக்க அணி, 431 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டன.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய இந்திய அணி 323 ஓட்டங்களை பெற்றிருந்த போது ஆட்டத்தினை இடைநிறுத்தியதுடன், 395 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்தது.



இந்தநிலையில் புருயின் விக்கெட்டை அஸ்வின் வீழ்த்தினர். இதன் மூலம் அவர் உலக சாதனை படைத்துள்ளார்.

அவர் இலங்கை சுழல் பந்துவீச்சாளர் முரளிதரனின் உலக சாதனையை சமன் செய்துள்ளார். இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 349 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார் அஸ்வின்.

நேற்றைய போட்டியில் அவர் ஒரு விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம், அதிவேகமாக 350 விக்கெட்களை வீழ்த்திய பந்து வீச்சாளர் என்ற சாதனையை முரளிதரனு டன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

# இறுதிக்குள் ஜோராக நுழைந்தார் நவோமி ஒசாகா!




சீன ஓபன் டென்னிஸ் போட்டி பீஜிங்கில் நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு அரை இறுதி போட்டியில் வீராங்கனையான ஜப்பானின் நவோமி ஒசாகாவும், டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கியும் மோதினர். இதில், நவாமி ஓசாகா 6-4, 6-2 என்ற நேர்செட்டில் வோஸனியாக் கியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இறுதிப்போட்டியில் ஜப்பான் வீராங்கனை நவாமி ஓசாக, அவுஸ்ரேலியாவின் ஆஷ்லிக் பார்டியை எதிர்கொள்கிறார்.

# பிக்பாஸ் - 3 ரைட்டிலை வென்றார் முகின்



பிக்பாஸ் மூன்றாவது சீசன் மிக பரபரப்பாக நடந்து வந்தது. 105 நாட்களை தொட்ட இந்த ஷோவுக்கு நேற்று இறுதி நாள்.

பைனலில் லாஸ்லியா, முகின், ஷெரின் மற்றும் சாண்டி ஆகியோர் போட்டியில் இருந்தனர். அவர்களில் முகின் டைட்டில் ஜெயித்துள்ளார்.

இதை வித்தியாசமான முறையில் பாக்ஸிங் போட்டிகளில் வெற்றியாளரை அறிவிப்பது போல கமல் அறிவித்தார். முகேன் ஜெயித்ததை அவரது குடும்பம் மற்றும்மட்டும் செட்டில் இருந்த அனைவரும் கொண்டாடினர்.

# கோடிகளில் மிதக்கும் சிந்து



பட்மின்ரன் விளையாட்டில் சிந்து பெற்ற வெற்றிகள்தான் அவர் இந்த அளவுக்கு உயர்ந்த சம்பளம் வாங்குவதற்கான காரணம்

பட்மின்ரன் உலக நாயகியான பி.வி.சிந்து, விளம்பர படங்களில் தோன்றுவதற்காக அதிக சம்பளம் வாங்கும் வீராங்கனைகள் பட்டியலிலும் முன்னணி இடத்தில்தான் இருக்கிறார். அவர் பிரபலமான பிராண்டுகளில் நடிக்க ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாய் சம்பளம் பெறுகிறார். 24 வயதான இவர், 2017-ம் ஆண்டைய நிலவரப்படி விளம்பரத்தில் அதிக சம்பளம் வாங்கும் விளையாட்டுத்துறையினர் பட்டியலில் இந்தியாவில் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். முதலிடத்தில் இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் விராட் கோலி உள்ளார்.

பட்மின்ரன் விளையாட்டில் சிந்து பெற்ற வெற்றிகள்தான் அவர் இந்த அளவுக்கு உயர்ந்த சம்பளம் வாங்குவதற்கான காரணம். விளையாட்டில் உலக அளவில் ஆறாவது இடத்தில் அவர் இருக்கிறார். இதுவரை 312 வெற்றிகளை குவித்திருக்கிறார். தோல்விகளின் எண்ணிக்கை 130 மட்டும். உலக சம்பியன் பதக்கம் உட்பட 15 சர்வதேச பதக்கங்களையும், 2016-ம் ஆண்டு ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கமும் பெற்றார்.

இவரது தந்தை வெங்கடரமணாவும், தாயார் விஜயாவும் கைப்பந்து விளையாட்டு சாதனையாளர்கள். சகோதரி டாக்டர் திவ்யாவுக்கு திருமணமாகிவிட்டது. திவ்யாவின் கணவர் ஸ்ரீராம். அவர்களுக்கு ஆர்யன் என்ற குழந்தை உள்ளது.

சிந்துவுக்கு பத்து வயதாக இருந்தபோது அவளது விளையாட்டுத் திறமையை நாங்கள் உணர்ந்தோம். அப்போது தினமும் 120 கி.மீ. பயணம் செய்து கோபிசந்த் மையத்திற்கு செல்வோம். அப்போதெல்லாம் ஒருநாள்கூட அவள் சோம்பல் அடைந்ததில்லை. அதனால் அவள் சாதனை படைப்பாள் என்று அன்றே நாங்கள் முடிவுசெய்துவிட்டோம். அவள் திருப்பதி ஏழுமலையானின் தீவிர பக்தை. அவளது வெற்றிகளில் கடவுள் அனுக்கிரகமும் உண்டு" என்கிறார், அவர்.

# கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானம் (நாராயணன் திருக்கோவில்)

## தேரோற்ஷவ சிறப்பு மலர்-07.10.2019 (திங்கட்கிழமை)



### நாராயணன் அருளால் நாட்டில் சமாதானமும் சகவாழ்வும் மலரட்டும்

கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீ வல்லீபுரநாதர் வரதாஜ மூர்த்தத்தில் பூலக்ஷிமி சமேதராக நின்ற கோலத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக் கிறார். அவர் தேரிலே பவனி வரும் காட்சி கண்களுக்கு இனியது. அவன் அருளால் அவன் தாள் வணங்கி நாட்டில் சமாதானமும் சகவாழ்வும் மலர எல்லாம்வல்ல நாரா யணப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

**"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"**

**கிரியா ஜோதி**
**சிவஸ்ரீ சிவஞானதிலீபன் குருக்கள்**
**(மஹோற்சவ பிரதமகுரு)**



### ஸ்ரீ வல்லீபுரநாதரின் புகழ் திக்கெட்டும் பரவட்டும்

கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீ வல்லீபுர நாதரின் பெருமையும் புகழும் அளப்பரியது.

புதுமையும் அருள் ஒளியும் நிறைந்த நாராய ணன் இன்று தேரேறி வருகின்றான். அவன் அருட் கடாட்சம் அனைத்துப் பக்த கோடிகளுக்கும் கிடை க்க பெருமானை வேண்டுகின்றேன்.

ஆன்மாக்களின் மும்மலங்களையும் அழித் தும் ஒடுக்கியும் வெள்ளுயிர் ஆக்கவல்ல பெருமா னின் புகழ் திக்கெட்டும் பரவி நம் எல்லோருக்கும் அருள் செய்வதாக.

*"கோவிந்த நாமசங்கீர்த்தனம்*
*கோவிந்தா கோவிந்தா"*

**அகோர சிவம்**
**சிவஸ்ரீ பகீரதக் குருக்கள்**
**ஆலய பிரதம குரு,**
**ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானம்.**

மலராக்கம்:
செ.சண்முகலிங்கம்,
(அகில இலங்கை சமாதான நீதவான்)

இரதோற்சவம்
காலை 10 மணிக்கு







### வைகுந்தப் பெருமானின் வருகையால் நாடு வளம் பெறட்டும்

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனாக எமது கோண்டாவில் ஊரில் உறைந்து இந்த அண்ட சராசரங்களையும் காக்கும் நாராயணன் தன்னை தேடி நாடி வரும் அடியவர்களுக்கு எல்லா வரங்களையும் வாரிவழங்கும் வல்லீபுரநாதரின் தேர்ப்பவனியானது "நெக்கு ருக வைக்கும் திருக்காட்சி அச்சுதன் வல்லீபுரத்தான் அழகு ரத பவனி" என்ற கிடைத்தற்கரிய, பார்ப்பதற்கு ஆனந்தமளிக்கும் இவ்வருஷ 37ஆவது மஹோற்சவ இரதோற்சவத்தில் எல்லோ ருக்கும் அன்பும்ஆனந்தமும் சகலஐஸ்வரியங்களும் செல்வங்க ளும் பேறுகளும் வாரி வழங்க வேண்டிநிற்கின்றேன்.

**தெ.சுகிர்தன், பொருளாளர், ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானம்.**



### நாராயணனின் புகழ் நானிலமெங்கும் பரவட்டும்

கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீ வல்லீபுர நாதருக்கு விகாரி வருஷ மஹோற்சவம் 37 ஆவது வருஷமாகும். பூதேவி ஸ்ரீதேவி சமேத வரதராஜமூர்த்தத்தில் நின்ற கோல அர்ச்சாவதார புருஷோத்தமனாகக் காட்சிதரும் இறைவன் இன்று தேரேறி வருவது நாம் செய்த பூர்வ புண் ணிய பலனாகும். உயர் நலம் உடையவனான எம்பெருமான் நாராயணனின் திருவடிகள் துயரறு சுடர் அடியாக நாட்டில் அமைதி, சாந்தி, சமாதா னத்தை ஏற்படுத்தி அவன் புகழ் நானிலமெங்கும் பரவட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

"மாதவன் னென்றென்று ஓதவல்லீரோல்
தீதொன்றும் அடையா ஏதும் சாராமே"

**S.K.N. தவராஜா JP**
**தலைவர் பரிபாலனசபை,**
**ஸ்ரீவல்லீபுர நாதர் தேவஸ்தானம்.**



### எட்டெழுத்து மந்திரம் எமக்கு அஷ்ட ஐஸ்வரியங்களையும் தரும்

கோண்டாவில் பதியில் எழுந்த ருளி இருக்கும் ஸ்ரீ வல்லீபுரநாதர் சங்கு சக்கர கதாபாணியாக பூதேவி ஸ்ரீதேவி சகிதமாக இன்று தேரேறி வரும் காட்சியைக் காண நாம் இன்று பூர்வ புண்ணியம் செய்தவர்கள். அவனுடைய எட்டெழுத்து மூலமந்திரம் எமக்கு அஷ்ட ஐஸ்வரி யங்களையும் தரும் என்பதால் தினமும் அவன் மூலமந்திரத்தை உச்சரித்து வழிபடுவோமாக.

"நாடிர் நாள் தொறும் வாடா மலர்கொண்டு
பாடீர் அவன் நாமம் வீடே பெறலாமே"

**அ.கருணானந்தராசா,**
**தேர்த்திருவிழா**
**உபயகாரர் (இலண்டன்)**



### எம்பெருமானின் அன்புக்கு ஆட்பட்டுக்கொண்டேன்

கோண்டாவில் ஸ்ரீ வல்லீபுரநாதர் பூதேவி ஸ்ரீதேவி சமேதராக நின்ற கோலத்தில் நாராயணனாக எழுந்தருளி இருப்பதும் அவனை திருவாராதனம் செய்வதில் நான் பேறுபெற்றுள்ளேன். இன்று அழகிய சித்திரத் தேரில் பவனி வருவது எமக்கெல்லாம் துன்பம் விலகி பேரின்பம் மலர எல்லாம் வல்ல எம்பெருமானின் அருளை வேண்டி பிரார்த்திக் கின்றேன்.

கண்ணன் கழலினை எண்ணும் மனமுடையீர் எண்ணும் திருநாமம் திண்ணம் நாரயணமே

**சிவஸ்ரீ நா.யுவன்சர்மா, ஆலய நித்தியகுரு,**
**வல்லீபுர நாதர் தேவஸ்தானம்.**



### வரம் தரும் வல்லீபுர நாதர்

ஈழமணித் திருநாட்டில் இதய பூர்வமாக விளங்கும் யாழ்ப்பாண நகரில் கோண்டாவில் ஊரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தான திருப்பதியானது இற்றைக்கு 300 வருடங்களுக்கு மேலாக பழைமையும் செழுமையும் வாய்ந்த ஒரு நாராயணன் திருக்கோவில் ஆகும். இங்கு மூன்று முறை கும்பாபிஷேகம் நிகழப்பெற்று நான்கு தசாப்தங்களாக மஹோற்சவம் நடைபெறுகின்றது. விகாரி வருஷ இரதோற்சவ நிகழ்வானது 37 வருட உற்சவம் ஆகும். இந்த திருநாளில் தேரேறிவரும் வல்லீபுர வரதராஜன் பூதேவி ஸ்ரீதேவி சமேதராய் வலம் வரும் இவ்வேளையில் நாட்டில் சாந்தியும் சமாதானமும் அமைதியும் அளிக்க வேண்டும் என்று இறைஞ்சுகின்றேன்.

**இ.டினேஸ்சன், செயலாளர்,வல்லீபுர நாதர் தேவஸ்தானம்.**


தேனு களஞ்சியம்
திருநெல்வேலி

Selva Electrical
No.21, Palaly Road,
Thirunelvely.

Sri Ram Hardware
Palaly Road, Kondavil
Junction, Kondavil.

முத்தொளி வீடியோ போட்டோ
தில்லையம்பதி, கோண்டாவில்.

விஜய் சில்க்
123, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

கஜன் வீடியோ & போட்டோ
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

புதிய நதியா நகை மாடம்
இல.73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தில்லையம்பதி மோட்டோர்ஸ்
100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நெல்சன் போட்டோ & வீடியோ
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்
T.P: 077 899 9902

ஜினா பூ மகால்
424, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளையார் எலக்ரிக்கல்
கோண்டாவில்.

(A-7797)

## பெருவிரல் அடையாளத்தின் மூலம்

# உங்கள் வாழ்க்கையில் முழுமையான பலனை அறிய வழி செய்யும் காண்டம்

**1 அறிமுக காண்டம்**

ஆண் வலதுகை பெருவிரல் ரேகை, பெண் என்றால் இடது கை பெருவிரல் ரேகை அல்லது பிறந்த திகதியைக் கொண்டு ஜாதகம் பெயர், தாய், தந்தை, மனைவி பெயர்கள், குழந்தைகள், சகோதர, சகோதரிகள் எண்ணிக்கை தற்போதைய தொழில் மற்றும் பின்வரும் 11 காண்டத்தின் பாவ பலன்களை சுருக்கமாக கூறுவதே அறிமுக காண்டம்.

**2 ஆவது காண்டம்**

பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு முதலியவைகளைப் பற்றிக் கூறுவது,

**3 ஆவது காண்டம்**

சகோதர, சகோதரிகள் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை, தீமைகளைக் கூறுவது.

**4 ஆவது காண்டம்**

தாயார், மனை, நிலங்கள், வாகனம், வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளை விபரமாகக் கூறுவது.

**5 ஆவது காண்டம்**

குழந்தைகள் பிறப்பு, இறப்பு, புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள், குழந்தைகள் இல்லாதவர்க்கு காரணம் கூறுவது.

**6 ஆவது காண்டம்**

வாழ்க்கையில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன் வழக்கு எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் அதை நீக்கும் வழிகளைக் கூறுவது.

**7ஆவது காண்டம்**

திருமண வாழ்க்கை திருமணக் காலம், திருமண காலத்தை கடந்த காரணம், எந்த திசையில் எப்படிப்பட்ட வரன் கிடைக்கும், அதனால் அடையும் நன்மைகளை கூறுவது, திருமணம் ஆனவர்களுக்கு கணவன் அல்லது மனைவியைப் பற்றி சொல்லுதல்.

**8 ஆவது காண்டம்**

ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம், விபத்து முதலியவைகளைக் கூறுவது,

**9 ஆவது காண்டம்**

தகப்பனார், செல்வம், யோகம், ஆலய தரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் முதலியவைகளைப் பற்றிக் கூறுவது.

**10 ஆவது காண்டம்**

தொழில், வியாபாரம், உத்தியோகம் எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

**11 ஆவது காண்டம்**

இலாபம் எந்த வகையில் கிடைக்கும் என்பதையும் இரண்டாவது திருமணம் முதலியவைகளினால் அடையும் நன்மைகளைக் கூறுவது.

**12 ஆவது காண்டம்**

செலவு எவ்வகையில் ஏற்பட்டது. ஏற்படக்காரணம், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை, வெளிநாடு பயணம் முதலியவைகளைக் கூறுவது.

**13 சாந்தி காண்டம்**

முன்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமைகள், அதனால், தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள், அதை நீக்குவதற்குரிய பரிகாரங்கள்.

**14 தீட்சை காண்டம்**

மந்திரத்தைப் பற்றிக் கூறுவது, எந்த மந்திரத்தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்னுடைய காரியமும், குடும்பத்தின் காரியமும் வெற்றி அடையும் என்பதையும், தீய கனவுகளிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளையும் கூறுவது.

**15 ஔஷத காண்டம்**

மருந்துகளைப் பற்றிக் கூறுவது, தீராத வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும் சாப்பிடும் வழிமுறைகளைக் கூறுவது.

**சிறப்புக் காண்டம்**

பொது வாழ்வு (அரசியல்) அதில் கிடைக்கும் புகழ், பதவி, நன்மைகள் இவற்றுக்குரிய காலங்களையும், ஜாதகர் குலதெய்வம் பற்றியும் அது இருக்கும் இடத்தையும் விரிவாக கூறுவது.

# வான்கதவுகள் சீரமைப்புப் பணிகளை வடக்கு ஆளுநர் பார்வையிட்டார்





(யாழ்ப்பாணம்)

8 வான்கதவுகளின் சீரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பருத்தித்துறை பகுதிக்கு நேற்று முன்தினம் பிற்பகல் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டு அபிவிருத்தி வேலைகள் தொடர்பில் கலந்துரையாடியதுடன் அப்பகுதி மீனவர்களுடனும் சுமுகமாக கலந்துரையாடினார்.

இதன்போது பருத்தித்துறை முனைப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநர் வடமராட்சி கடற்றொழில் சமாசத்தின் தலைவர். மீன்பிடிச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் அப் பகுதியில் வாழும் மீனவர்களுடன் கலந்துரையாடினார்.

16 வான்கதவுகளை சீரமைப்பதற்காக ஆளுநரிடம் வடமராட்சி கடற்றொழில் சமாசத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக ஆளுநரின் வேண்டுகோளுக்கிணங்க முதற்கட்டமாக 8 வான் கதவுகளை சீரமைப்பதற்கான 2 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியைச் சேர்ந்த ஜெயக்குமாரன் மினேஸ் அண்மையில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவனான இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-2-10)

## இராசி பலன்

**மேடம்:** கனவு பலிதமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம்.

**மிதுனம்:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கடகம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல் நலம் சீராகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**கன்னி:** தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, பெற்றோர் வழியில் பிரியம் கூடும், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**மகரம்:** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், உடல் நலன் சீராகும்.

**கும்பம்:** தொழிலில் சில மாற்றங்கள் செய்வது பற்றி சிந்திப்பீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், பயணத்தால் பலன் கிடைக்கும், சுப காரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | இராசி பலன் | | |
| சந் | சந்திராஷ்டமம் திருவாதிரை, புனர்பூசம் | | |
| சனி, கேது | குரு | சுக், புத | சூரி, செவ் |

**07.10.2019**

புரட்டாதி 20, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
நவமி பிற்பகல் 4.21 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 7.31 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
மகா-நவமி விரதம்

வளவன்

# இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட 45கிலோ கேரளக் கஞ்சா பறிமுதல்

## கடற்படையினரால் இருவர் கைது



(கரணவாய்)

**இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடத்திவரப்பட்ட 45 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.**

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 30 மணியளவில் வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்பரப்பில் சந்தேகத்துக்கிட மான முறையில் சென்று கொண் டிருந்த படகு ஒன்றைக் கடற்படை யினர் சோதனையிட்டனர்.

இதன்போது படகில் கொண்டு செல்லப்பட்ட 45 கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

இதனையடுத்து படகிலிருந்த மருதங்கேணிப் பகுதியைச் சேர்ந்த இருவர்கைது செய்யப்பட்டு காங்கே சன்துறை கடற்படைத் தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். (இ-60)

## மழையால் மண்சரிவு

(நோர்வூட் )

நேற்று முன்தினம் மாலை பெய்த அதிக மழைவீழ்ச்சி காரணமாக கொசல்கமுவலுயா, காசல்ரீ நீர்த்தேக்கத்தில் இணையும் நோர்வூட் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டது.

இதன்போது, பாரிய மண் மேடு ஒன்று, நீர்த்தேக்கத்தில் சரிந்ததுடன், அவ்வாறான பகுதி யொன்று மண்சரிவு அபாயத் துக்குள்ளானது.

அதிக மழைகாரணமாக, நோர்வூட் பகுதியில் இருந்து அதிகளவான வெள்ளநீர் நீர்த் தேக்கத்தில் கலந்துள்ளமையால் இந்த மண்சரிவு ஏற்பட்டது.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் அதிக மழை காரணமாக, காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட் டம் சடுதியாக உயர்வடைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வல்லிபுர ஆழ்வார் ஆலயப்பகுதியில் இளைஞர்களிடையே திடீர் மோதல்

### ஆறுபேர் படுகாயம்; வைத்தியசாலையில் அனுமதி

(கரணவாய்)

வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழாவில் கலந்து கொண்ட இளைஞர்களிடையே ஏற்பட்ட மோதலில் படுகாயங்களுக்குள்ளான 6 இளைஞர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளான துன்னாலை வடக்கைச் சேர்ந்த த.கவிதன் (வயது- 19), ம.கார்த்தீபன் (வயது -27), சி.சாரங்கன் (வயது -19), தே.அகிலன் (வயது -19), ச.யேசுதன் (வயது -19), செ.ரஞ்சித்குமார் (வயது -18) ஆகிய 6 இளைஞர்களும் இரவு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் எட்டாம் திருவிழாவான நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு சுவாமி வெளிவீதி உலா வந்து இருப்பிடத்துக்கு சென்றதைத் தொடர்ந்து ஆலயத்தின் வெளி வீதி பகுதியில் இளைஞர்களிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது அடிதடியில் முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் கற்கள், கொட்டன்கள் இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

## ஆசிரியர் தினம்

(யாழ்ப்பாணம்)

போக்கட்டி அ.த.க. பாடசாலையின் ஆசிரியர் தின விழா நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொடிகாமம் நட்சத்திர மஹால் உரிமையாளரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமான தி.பரமானந்தம் கலந்து சிறப்பிப்பார். (இ-114)

❖❖❖❖❖❖❖❖❖

(சாவகச்சேரி)

யூப்பிட்டர் கல்வி நிலையத்தின் ஆசிரியர் தினவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் தரம் 11 மாணவன் ஜெ.நர்மதன் தலைமையில் கைதடி குருசாமி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆசிரியர் செ.பிரதாப், விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியர் எஸ். சத்தியேஸ்வரன், சீபன் பாஸ்கர் சாரதிப் பயிற்சிப் பாடசாலை அதிபர் கு.டசீபன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் அ.செந்தூரன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (இ-114)

## யாழ்.கோட்டையில் புத்தருக்கான கட்டுமானப் பணிகள் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டையின் உட்பகுதியில் புத்தர் சிலையை சூழ சீமெந்து கொண்டு அமைக்கப்படவிருந்த கட்டுமானப் பணிகள் யாழ்.மாவட்டத் தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்களால் நிறுத்தப்பட்டது.

கடந்த வருடம் யாழ்.கோட்டைப் பகுதியில் காணப்படும் கண்ணிவெடிகளை அகற்றுவோருக்கு உதவியாக கோட்டையில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட இராணுவ முகாமில் இராணுவத்தினர் தமது மத வழிபாடுகளை மேற்கொள்ளவென புத்தர் சிலை வைக்கப்பட்டது.



இவ்வாறான நிலையில் குறித்த புத்தர் சிலையைச் சுற்றி நிரந்தர கற்களைப் பயன்படுத்தி கட்டடம் அமைக்கும் பணி இடம்பெறத் தயாராக இருந்த நிலையில் குறித்த கட்டுமானப் பணிகள் தொல்பொருள் திணைக்களத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டது. (இ-10)

## நவராத்திரி விழா

(சாவகச்சேரி)

கைதடி வடக்கு சனசமூக நிலையத்தின் நவராத்திரி விழா எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை 6 மணிய ளவில் கயிற்றசிட்டி கந்தசுவாமி கல்யாண மண்டபத்தில் சனசமூக நிலையத் தலைவர் சி.மதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் அ.லோகநாதன், கைதடி குருசாமி வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன், தியாகி அறக்கட்டளை நிறுவனப் பணிப்பாளர் பொ.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)

**தெல்லிப்பழை பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலாசார விழா கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம் பெற்றது. பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சி.ரமணராஜா, கௌரவ விருந்தினர்களாக யூனியன் கல்லூரி அதிபர் தி.வரதன் மற்றும் கலாபூஷணம் மு.சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.**

# ஒற்றுமையாக ஓரணியில் நின்று ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள தமிழ்த் தலைமைகள் முன்வர வேண்டும்

## வேலுகுமார் அழைப்பு



(கண்டி)

கட்சி அரசியலுக்காக பேரினவாதிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்காமல் தமிழ் மக்களின் நலனை முன்னிலைப்படுத்தி ஒன்றுமையாக ஓரணியில் நின்று ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் செயற்பாட்டாளர்களுடன் நேற்றுக்காலை கண்டி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

தமிழர்களின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டபின்னர் 'ஒற்றுமை' என்ற ஆயுதமே தமிழர்களுக்கு எஞ்சியிருக்கின்ற இறுதி அஸ்திரமாகும். எனவே, அந்த ஒற்றுமையை சிதைத்து, தமிழர்களை கூறுபோடுவதற்காக பேரினவாதிகள் பலவழிகளிலும் பொறிகளை வைத்து வருகின்றனர்.

இந்த கபடநோக்கத்தை - சூழ்ச்சித் திட்டத்தை அறியாமல், வடக்கு, கிழக்கிலுள்ள அரசியல் தலைவர்கள், கொள்கைகளுக்கு அப்பால் கட்சி அரசியலை முன்னிலைப்படுத்துவதால் பேரினவாதிகளின் திட்டம் வெற்றிகரமாக அரங்கேறிவருகின்றது.

இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கப்போகின்ற ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அந்தத் தேர்தலை எவ்வாறு தமிழ் மக்களுக்கு சார்பானதாக அதேபோல் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய வேட்பாளர்களை வெற்றிபெறவைப்பதற்கான களமாக பயன்படுத்துவது என்பது தொடர்பிலேயே தமிழ்க் கட்சிகள் சிந்திக்க வேண்டும்.

மாறாக இறுக்கமான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து, எழுத்து மூல உத்தரவாதம் வேண்டும் என்றெல்லாம் அடம்பிடித்து கட்சி அரசியலை மட்டுமே முன்னிலைப்படுத்தினால் மகிந்த தலைமையிலான பேரினவாதிகளின் வேட்பாளருக்கான வெற்றிக்கே தெற்கில் அது வழிசமைத்துக்கொடுக்கும்.

அதேவேளை, கடந்தகாலத்தில் தமிழ்க் கட்சிகளுக்கிடையே நடைபெற்ற சில கசப்பான சம்பவங்களை பற்றி மட்டுமே நிகழ்காலத்தில் பேசி எதிர்காலத்தை தொலைக்கப் போகின்றோமா, அல்லது மக்கள் நலனை முன்னிலைப்படுத்தி கொள்கைரீதியில் சில விட்டுக்கொடுப்புகளை செய்து மக்களின் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக இணைந்து செயற்படப் போகின்றோமா என்பதை தீர்மானிக்க வேண்டிய மிக முக்கியமான காலகட்டம் இது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம் மக்களின் இருப்புக்கு ஆபத்து ஏற்பட்டபோது, அவர்கள் அடக்கி ஆளப்பட்டபோது சமூகத்தின் நலனை முன்னிலைப்படுத்தி பதவி பட்டங்களையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒன்றாக சங்கமித்தனர்.

இங்கு கட்சி அரசியலுக்கு அப்பால் மக்கள் குறித்து சிந்திக்கப்பட்டது. மலையகத்திலுள்ள கட்சிகளும் புரிந்துணர்வு அடிப்படையில் செயற்பட்டுவருகின்றன.

எனவே, முக்கியமான இந்த காலகட்டத்தில் ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் நலனைகருதி, விட்டுக்கொடுப்புகள் சகிதம் இணைந்துசெயற்பட வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் முன்வரவேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் விடுக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எல்பிட்டிய தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

(காலி)

காலி எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக அந்த மாவட்ட தேர்தல் தெரிவு அத்தாட்சி சோமரத்ன விதான பத்திரண தெரிவித்தார்.

இந்தத் தேர்தல் எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறும். இது தொடர்பாக தெரிவு அத்தாட்சி தகவல் தருகையில், 47 வாக்களிப்பு மத்திய நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளன. இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

சுமார் 750 அரச ஊழியர்கள் இந்த பணிகளில் ஈடுபடவுள்ளனர். தேவையான வாகனங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தேர்தலுக்கான பாதுகாப்பு தொடர்பில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைதியான முறையில் தேர்தல் சட்ட விதிகளை மதித்து எதிர்வரும் 11 ஆம் திகதி வாக்காளர்கள் வாக்களிப்பில் ஈடுபட வேண்டுமென்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மண்மேட்டில் மோதி கார் விபத்து

## இருவர் படுகாயம்



(லிந்துலை)

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாமஸ்டன் பிரதேசத்தில் கார் ஒன்று நேற்று முன்தினம் மாலை மண்மேட்டில் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

நுவரெலியா பகுதியிலிருந்து ஹற்றன் பகுதியை நோக்கிச் செல்லும் போது ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் பாமஸ்டன் பிரதேசத்தில் பிரதான வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

குறித்த காரில் இருவர் பயணித்ததாகவும், இருவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## மக்களின் இதயத்துடிப்பை உணர்ந்த

# தூர நோக்குடைய கறைபடாத துடிப்பான தலைவர் சஜித்

## இராதாகிருஷ்ணன் புகழாரம்



(ஹற்றன்)

கறைபடாத கரங்கள், துடிப்பான தலைவர் தன் தந்தை வழியில் பயணிக்கும் தூர நோக்குக் கொண்ட இலங்கையின் அனைத்து மக்களுடைய இதயத் துடிப்பை உணர்ந்த ஒரேயொரு ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மட்டுமே என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

'சஜித்துடன் நாட்டை வெற்றி கொள்ளும் போராட்டம்' என்ற தொனிப்பொருளில் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முதலாவது பிரசாரக் கூட்டம் நேற்றுக் காலை ஹற்றனில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சஜித் பிரேமதாஸவின் பொறுமைக்கு கிடைத்த வெற்றியே ஜனாதிபதி வேட்பாளர். என்றுமே தன்னுடைய கொள்கையில் இருந்து தளர்ந்து விடாமல் தான் கொண்ட கொள்கையை விட்டுக் கொடுக்காமல் கட்சியையும் பாதுகாத்துக்கொண்டு அனைவருடைய மனதையும் வெற்றிகொண்டு வேட்பாளராக களமிறங்கியவர் சஜித்.

அவருடைய தந்தை இந்த நாட்டிற்கு செய்த சேவைகளை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. வீடமைப்பு கம் உதாவ, ஜனசவிய, ஆடை தொழிற்சாலைகள் இப்படி பல்வேறு திட்டங்களை அறிமுகம் செய்து வெற்றிகொண்ட ஒரு மாபெரும் தலைவர்.

என்னைப் பொறுத்தவரை, நான் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுடன் பிரதேச சபைத் தவிசாளராக இருந்து ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளேன்.

இன்று அவருடைய மகனோடு செயற்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே அவர் குடும்பத்தையும் அவருடைய கொள்கைகளையும் நான் நன்கு அறிந்தவன் என்ற வகையில் அவரோடு இணைந்து பயணிப்பதை ஒரு வெற்றியாகக் கருதுகிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மொரட்டுவையில் மீட்கப்பட்ட

# வெடிகுண்டுகள் குறித்து பொலிஸார் விளக்கம்



(கொழும்பு)

மொரட்டுவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ராவத்தாவத்தை பிரதேசத்தில் காணியொன்றை துப்புரவு செய்யும் போது மூன்று வெடி குண்டுகள் மீட்கப்பட்டன.

துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் இது தொடர்பில் மொரட்டுவை பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து,

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த குண்டுகளை மீட்டனர்.

கடந்த (வெள்ளிக்கிழமை) மாலை இவ்வாறு குண்டுகள் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. மீட்கப்பட்ட குண்டுகள் தொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்ததாவது,

இந்தக் குண்டுகள் மிகவும் பழைமையானவையாகக் காணப்பட்டாலும் வெடிக்கக் கூடிய வகையிலேயே இருந்தன. எனவே இவற்றை விமானப்படையினர் வெடிக்கச் செய்து செயழிலக்கச் செய்துள்ளனர்.

அத்தோடு இவை முப்படைகளிலிருந்து தப்பிச் சென்றவர்களால் இங்கு வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸாரால் சந்தேகிக்கப்படுகிறது. (இ-7)

# மக்கள் வரிப்பணத்தில் மாளிகைகளில் மீண்டும் அரச வாழ்க்கையை வாழ்வதற்கு ஒரு கூட்டம் அதிகாரத்திற்கு ஆசைப்படுகிறது

## மகிந்த அணி மீது சஜித் சாடல்



(கொழும்பு)

**இலங்கையில் மீண்டும் அரச வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற நோக்கில்தான், தற்போது ஒரு கூட்டம் அதிகாரத்திற்காக ஆசைப்பட்டுக் கொண்டிருப்பதாக ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பொலநறுவையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இன்று ஒரு கூட்டத்துக்கு அதிகார ஆசை வந்துவிட்டது. அலரி மாளிகைக்குள் எவ்வாறு நுழைவது, ஜனாதிபதி மாளிகைக்குள் எவ்வாறு நுழைவது என்றே இவர்கள் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் சலுகைகளை வழங்கவா இவ்வாறு ஆசைப்படுகிறார்கள்? தொழிலாளர்களுக்கு வருமானத்தை அதிகமாக பெற்றுக் கொடுக்கவா ஆசைப்படுகிறார்கள்? அல்லது மத்திய தர வர்க்கத்தினரை சக்திப்படுத்தவா? இல்லை.'

இவர்களின் ஒரே குறிக்கோள், தங்களையும் தாங்கள் சார்ந்தவர்களையும் பலப்படுத்த வேண்டும் என்பதுதான்.

மாளிகைகளில் அரச வாழ்க்கை வாழ்வதே இவர்களின் நோக்கமாகும். இதற்காக மக்களின் வரிப்பணத்தை பயன்படுத்துவதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும்.

ஒரு நாட்டின் தலைவன் என்றால், தனது குடும்பத்தைவிட இந்த நாட்டைத் தான் நேசிக்க வேண்டும். 60 இலட்சத்துக்கும் அதிகமான குடும்பங்களைத்தான் தனது குடும்பமாக கருத வேண்டும்.

2 கோடிக்கும் அதிகமான மக்களை நேசிக்க வேண்டும். நான் இவ்வேளையில் ஒன்றைக் கூறிக்கொள்கின்றேன்.

சஜித் பிரேமதாஸ ஆகிய எனக்கு எனது குடும்பமோ எனது உறவுகளோ என்றும் முக்கியமல்ல. எனக்கு முதலாவதும், இரண்டாவதும், மூன்றாவதும் இந்த நாட்டு மக்கள் தான். எந்தவொரு பிரிவினையும் இன்றி இந்த நாட்டை உயர்த்துவதே ஒரே இலக்காகும்" எனத் தெரிவித்தார். (இ-7)

## நவராத்திரி விழா



(குருமன்காடு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகம் இணைந்து நடத்திய நவராத்திரி விழா வவுனியா குடியிருப்பு பிரதேச கலாசார மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் தி. திரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் கமலதாசன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், அறநெறி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பாலர் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சக்தி பூஜையுடன் ஆரம்பமான இந் நவராத்திரி விழாவில் அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (9-250)

## சர்வதேச மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோர் தினம் வவுனியாவில்



(நெளுக்குளம்)

சர்வதேச மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டோர் தினம் வருடாந்தோறும் ஒக்டோபர் 6 ஆம் திகதி சர்வதேச ரீதியாக மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு நாளாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நேற்று வவுனியா சீட் (seed) நிறுவனத்தின் அனுசரணையுடன் National Centre for Children with Cerebral Palsy and other Development Disorders என்னும் நிறுவனத்தின் இயக்குநர் கோபி கிட்ணசாமியின் ஏற்பாட்டின் கீழ் வவுனியா நகர சபை சிறுவர் பூங்காவில் இத்தினம் நடைபெற்றது.

இதன் போது மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், மருத்துவ சமூகம், சீட் நிறுவன ஊழியர்கள், பொது அமைப்புக்கள், உடற்கூற்று நிபுணர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்த செல்வி. கேசிகா குமாரதீசன் (occupational therapist) கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் 40 ஆயிரம் அதிகமான மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் காணப்படுவதாக தரவுகள் கூறப்படுகின்ற போதிலும் அவர்களை முழுமையாக அடையாளப்படுத்தி அவர்களுக்கான சிகிச்சைகள் வழங்குவதில் சிக்கல்கள் காணப்படுவதாகவும் ஆனால் அனைவரையும் அடையாளப்படுத்தி அவர்களுக்கான சிறந்த சேவைகளை வழங்குவதே எமது நோக்கம். அவர்களை அடையாளப்படுத்துவதற்கான ஒரு அவசர தொலைபேசி இலக்கம் 077 711 6116 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு தொடர்பு கொள்வதன் ஊடாக இவர்களுக்கான மேலதிக சேவைகளை எமது நிறுவனம் வழங்கும் என தெரிவித்தார். (9-299)

## "சஜித்துடன் நாட்டை வெற்றி கொள்ளும் போராட்டம்" தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முதலாவது கூட்டம்





(ஹற்றன்)

"சஜித்துடன் நாட்டை வெற்றிகொள்ளும் போராட்டம்" என்ற தொனிப்பொருளில் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தமிழ் முற்போக்கு கூட்டணியின் முதலாவது பிரசார கூட்டம் நேற்றுக் காலை ஹற்றனில் இடம்பெற்றது.

ஹற்றன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைச்சர்களான மனோகணேசன், பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன், சுஜீவ சேனசிங்க, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# விதை விதைத்தல் தமிழர் நாகரிகத்தின் முதுகெலும்பு

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு







(வவுனியா)

போர் கண்ட தேசத்தில் திரும்பவும் தேர் ஓடவேண்டும் என்றால் அந்த போருக்கும் தேருக்கும் இடையிலே இருக்கின்ற ஏரோடவேண்டும். வான் மழையை அறுவடை செய்து அங்கே குளம் கட்டி குலதெய்வம் வைக்கும் நாகரிகம் வளர்த்தவர்கள் நம் தமிழர்கள் . அந்த நாகரிகம் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கும் அப்பாற்பட்டதென இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே விதை விதைக்கும் விழா என்பது நம் நாகரிகத்தின் முதுகெலும்பாக இருக்கின்றது என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வவுனியா ஓமந்தை அலைகல்லுப்போட்டகுளத்தில் காலபோக வயல் விதைப்பு விழா நேற்று இடம்பெற்றது.

அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவனின் வழிகாட்டலில் மத்திய அரசின் சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியில் புனரமைப்பு செய்யப்பட்ட அலைகல்லுப்போட்டகுளம் வவுனியா மாவட்ட கமக்காரர் அமைப்பினால் புனரமைப்பு செய்யப்பட்டு நேற்று விவசாயிகளிடம் கையளிக்கும் நிகழ்வுடன் இணைந்ததாக வயல் விதைப்பு விழாவும் இடம்பெற்றிருந்தது.

மாவட்ட கமக்கார அமைப்பின் தலைவர் சேதுகாவலர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கலந்துகொண்டு புனரமைப்பு செய்யப்பட்ட குளத்தை விவசாயிகளிடம் கையளித்தார். இதனையடுத்து அலைகல்லுப்போட்டகுளம் வயல் நிலத்தில் காலபோக வயல் விதைப்பினையும் வடமாகாண ஆளுநர் மற்றும் வவுனியா அரசாங்க அதிபர் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் சி. சத்தியசீலன்,மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், கமநல அபிவிருத்தி ஆணையாளர் இ. விஜயகுமார், நீர்ப்பாசன திணைக்களத்தின் பொறியியலாளர்கள், கால்நடை வைத்திய அதிகாரி உட்பட திணைக்கள தலைவர்கள், விவசாயிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (9)

# குடிநீர் கேட்டு வீதிக்கு இறங்கிய மக்கள்



(குருமன்காடு)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினால் வழங்கப்படும் குடிநீர்த் திட்டம் கடந்த நான்கு நாட்களாக சீரான முறையில் வழங்கப்படாமையினால் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாக தெரிவித்து மதவுவைத்தகுளம் பகுதி மக்கள் அப்பகுதியில் அமைந்துள்ள குடிநீர்த்தாங்கிக்கு முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இக் குடிநீர்த் திட்டம் தனியார் நிறுவனம் ஒன்றினால் அமைக்கப்பட்டு பின்னர் பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்மூலம் வருமானத்தைப் பெற்று அதனைப் பராமரிக்குமாறு அக்கிராமத்திலுள்ள பொது அமைப்பினரிடம் பிரதேச சபையினர் ஒப்படைத்தனர்.

எனவே அவர்களே இதற்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள். அத்துடன் இவ்விடயம் தொடர்பில் எமக்கு இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை. முறைப்பாடுகள் கிடைத்தால் நாம் நடவடிக்கை எடுக்க முடியுமென தெரிவித்தார். (9-250)

# நிவாரணப் பொருட்கள் கையளிப்பு



(மன்னார்)

வவுனியா மாவட்டம் செட்டிகுளம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களில் வருமானம் குறைந்த வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் வறட்சி மற்றும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணப் பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின்(MSEDO) ஏற்பாட்டில் அதன் குழுத்தலைவர் ஜாட்சன் தலைமையில் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது

மன்னார்-வவுனியா பிரதான வீதியின் எல்லை கிராமங்களான கண்ணாட்டி, பெரிய கட்டு, பிரமணாலங்குளம், நீலியாமோட்டை, கூழங்குளம், வடகாடு, தம்பனைவீதி, கல்லுமலை ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக வரட்சி மற்றும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட மக்களுக்கு கிராம உத்தியோகத்தர்களின் தெரிவின் அடிப்படையில் 17 இலட்சம் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் 500 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு கையளிக்கப்பட்டன.

குறித்த நிவாரணப் பொருட்கள் கண்ணாட்டி பங்குத்தந்தை கிராம உத்தியோகத்தர் மெசிடோ நிறுவன ஊழியர்களால் பொது மக்களுக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# வவுனியாவில் திடீர் சோதனை- அச்சத்தில் மக்கள்





(குருமன்காடு)

வவுனியாவில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து தீவிரமாக தேடுதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையால் மக்கள் பதற்றமான நிலையில் காணப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் இலங்கையில் உள்ள தேவாலயங்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும் இரு மாதங்களின் பின் வழமைக்கு திரும்பியிருந்த நிலையில் மீண்டும் சில நாட்களாக வவுனியாவில் பாதுகாப்புச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் வவுனியாவில் உள்ள தேவாலயங்களுக்குள் நேற்றுக் காலை மோப்பநாய் சகிதம் பொலிஸார் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் வவுனியா ஈச்சங்குளம், பம்பைமடு, மகாறம்பைக்குளம் வீதி போன்ற பகுதிகளில் வீதியை மறித்து பரல்கள் அடுக்கி தீவிரமாக மக்களை சோதனை செய்யும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் இராணுவத்தினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் வவுனியா நகரப் புறங்களில் விசேட அதிரடிப் படையினர் மோட்டார் வண்டியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பூந்தோட்டம் மதீனாநகர் பகுதியில் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நடவடிக்கைகளால் வவுனியாவில் மக்கள் பதற்றத்துடன் காணப்படுகின்றனர். (9-250-299)




# குமுழமுனை சிறுகடலில் சட்டவிரோத தொழில்கள் மற்றும் குப்பைகள் கொட்டுவதால் மீனவர்கள் பாதிப்பு

(முல்லைதீவு)

முல்லைத்தீவு - குமுழமுனைப் பகுதியில் அமைந்துள்ள சிறுகடலில், சட்டவிரோத மீன்பிடி இடம்பெறுவதுடன், குறித்த சிறுகடலினுள் குப்பைகளும் கொட்டப்படுவதால், தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக அப்பகுதியில் பாரம்பரியமாக இறால் பிடியில் ஈடுபடுபவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியிருந்தும், இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக உதய சூரியன் கூட்டுறவு சங்கத்தினர் கருத்துத் தெரிவிக்கையில், குறிப்பாக நூறிற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இச் சிறுகடலில் பாரம்பரிய இறால் பிடியில் ஈடுபட்டு வருகின்ற போதும், அதிலும் நாற்பதிற்கும் அதிகமான குடும் பங்கள், மிகவும் வறுமைப்பட்ட பெண்தலைமைத்துவக் குடும்பங்களாகும்.

இடப்பெயர்விற்குப் பிற்பாடு இச் சிறுகடலில் கூட்டுவலை, இழுப்பு வலை போன்ற சட்டவிரோத தொழில்களில் வெளிமாவட்ட மற்றும் வெளி பிரதேசத்தவர்கள் ஈடுபட்டு வருவதால் பாரம்பரிய இறால் பிடியில் ஈடுபடுபவர்கள் தமது தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பாரம்பரிய இறால் பிடியில் ஈடுபடுபவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதுடன், தாம் தொழில் இன்றி கடனாளிகளாக்கப்பட்டுள்ளதாகவும்,

மேலும் குறித்த சிறுகடலினுள் தற்போது அதிக மாக குப்பைகள் கொட்டப்படு வதாலும் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் பாரம்பரிய இறால் பிடியில் ஈடுபேடுபவர்கள் தெரிவித்தனர்.

குறித்த மீனவர்களின் பாதிப்பு நிலைமைகளைக் கேட்டறிந்த முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன்,முல்லைத்தீவு மாவட்ட நீரியல்வளத் திணைக்களத்தின், கடற்றொழில் பரிசோதகருடன் தொடர்பினை ஏற்படுத்தி, இது தொடர்பில் அவரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

இது தொடர்பில் தாம் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கையை மேற்கொள்வதாக கடற்றொழில் பரிசோதகரால் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை குப்பைகள் கொட்டப்படுவது தொடர்பில், உரிய பகுதிக்குரிய பிரதேசசபை உறுப்பினருக்கு ரவிகரன் அழைப்பினை ஏற்படுத்தி தெரிப்படுத்தியிருந்தார்.

அது தொடர்பில் தாம் கவனம் செலுத்துவதாக குறித்த பிரதேசசபை உறுப்பினராலும் தெரிவிக்கப்பட்டது. (9)

# அக்கராயன் பிரதேசத்தில் ஆசிரிய மத்திய நிலையம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள அக்கராயன் பிரதேசத்தில் 23.78 மில்லியன் ரூபா செலவில் ஆசிரிய மத்திய நிலையதின் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.


கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்களின் திறன் விருத்தியை மேம்படுத்தும் வகையில் அக்கராயன் பிரதேசத்தில் குறித்த ஆசிரியர் மத்திய நிலையம் கடந்த ஆண்டு முதல் அமைக்கப்பட்டு வருகின்றது.

**TSEP** நிதித்திட்டத்தின் கீழ் 23.78 மில்லியன் ரூபா செலவில் குறித்த ஆசிரியர் மத்திய நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. (9-315)

# அடிப்படை வசதி இன்மையால் அழிந்து வரும் தமிழ் கிராமம்

## மக்கள் குடியேற நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை







(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புதுவிளாங்குளம் கிராமத்தில் மக்கள் வாழ்வதற்கான அடிப்படை வசதிகள் இன்மையால் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா கனகராயன்குளம் நகர்ப்பகுதியிலிருந்து சுமார் நான்கு கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருக்கும் விவசாய கிராமமே புதுவிளாங்குளம் கிராமமாகும்.

தலைமுறை தலைமுறையாக தமிழ்க் குடும்பங்கள் விவசாயத்தை நம்பி தமது ஜீவனோபாயமாக கொண்டு செல்வச் செழிப்புடன் வாழ்ந்தமைக்கான எச்சங்கள் குறித்த கிராமத்தில் தற்போதும் காணப்படுகின்றது.

கிர்ாமத்துக்கு நடுவே சிவன் கோவில் ஒன்று அமைந்துள்ளது. அக் கோயிலை தனியொருவராக பூசகர் பராமரித்து அங்கேயே தங்கி வாழ்கின்றார்.

கோவிலை சுற்றி பனை, மா மரங்கள் சோலை போல காட்சி தருகிறது. மக்கள் குடியிருந்த பகுதிகள் பெரிய மரங்கள் வளர்ந்து காடுகள் போல காட்சியளிக்கின்றன.

மக்கள் குடியிருந்த பகுதியை சுற்றி வயல் நிலங்கள், குளம் என்பன காணப்படுகின்றன. அவ்வாறு இயற்கை எழில் கொஞ்சும் புது விளாங்குளம் கிராமத்தில் தற்போது ஒரு குடும்பம் கூட குடியிருக்கவில்லை.

விவசாய காலத்தில் மட்டும் யானைகள் மற்றும் வனவிலங்குகளுடன் போராடி வயல் விதைத்து அறுவடையின் பின்னர் குறித்த கிராமத்தில் ஆள் நடமாட்டமே இருக்காது யானைகள், விலங்குகள் மட்டுமே கிராமத்தில் வாழ்ந்து வருவதாக கிராமவாசியொருவர் தெரிவித்தார்.

போர்க்கால சூழலில் இடம்பெயர்ந்த புதுவிளாங்குளம் மக்கள் கனகராயன்குளம், வவுனியா மற்றும் புலம்பெயர் தேசங்களென இடம்பெயர்ந்து சென்றனர். தற்போது மீள்குடியேற்ற காலப்பகுதியில் அடிப்படை வசதிகளான போக்குவரத்து, மின்சாரம், பாடசாலை, வைத்திய சாலை, வீதிகள் சீரின்மையால் குறித்த கிராமத்தில் மக்கள் குடியமர்வதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர்.

அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பட்சத்தில் தாம் தமது பூர்வீக கிராமத்தில் வாழ்வதற்கு தயாராக இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படும் நிலையில் தமிழ் கிராமங்களுக்கு மத்தியில் அமைந்திருக்கும் புதுவிளாங்குளம் கிராமத்தில் மக்கள் மீண்டும் வாழ்வதற்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். (9-299)

## புதையல் தோண்டிய இருவர் கைது

(நெளுக்குளம்)

நெடுங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஐயன் கோவில் காட்டு பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட இருவர் நேற்று முன்தினம் நெடுங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுங்கேணி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 36,24 வயதுடைய ஒலுமடு பகுதியை சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட மண்வெட்டி, பிக்கான் உட்பட சில பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (9-299)




## மன்னாரில் இடம்பெற்ற இளைஞர் முகாம்



(மன்னார்)

இளைஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு தசாப்த நிறைவினை கொண்டாடும் வகையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தினால் இளைஞர்களின் ஆளுமை விருத்திக்காக தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தும் இளைஞர் முகாம் கடந்த மூன்று நாட்கள் மன்னாரில் இடம்பெற்றது.

மாந்தை பிரதேச இளைஞர் கழகங்களை உள்ளடக்கி "எதிர்பார்ப்பின் இளைஞர் முகாம்" எனும் தொனிப்பொருளில் மாந்தை மேற்கு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி தர்சன் தலைமையில் மன்.அடம்பன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. குறித்த இளைஞர் முகாமில் இளைஞர்களின் ஆளுமை விருத்தி,உடல் ஆரோக்கியம், உளநல விருத்தி மற்றும் தொழில்பயிற்சி தொடர்பாக விரிவுரைகள் வழங்கப்பட்டதுடன் நடைமுறை பயிற்சிகளும் வழங்கப்பட்டன.அதே நேரத்தில் குறித்த இளைஞர் முகாமிற்கு சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாகாண பணிப்பாளர் முனாபர், மன்னார் மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் மஜித், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி பூலோகராஜா, மன்.அடம்பன் மகாவித்தியாலய அதிபர், இலங்கை இளைஞர் கழக சம்மேளன பிரதி நிதிகளான ஜசோதரன் மற்றும் ஜோசப் நயன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் இளைஞர் முகாமில் சிறப்பாக செயற்பட்ட இளைஞர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கி வைத்தனர். (9-285)

## வீதி கையளிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தேராவில் கிராம அலுவலர் பிரிவில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான தேராவில் இரண்டாம் ஒழுங்கை சுமார் ஒரு கிலோமீற்றர் நீளமான வீதி கம்பரெலிய திட்டத்தினூடாக புனரமைத்து மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.



வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவின் கம்பரெலிய நிதி ஒதுக்கீட்டின் மூலமாக குறித்த வீதி சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியில் புனரமைத்து கடந்த வாரம் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் ஜீ.கிருபாஜினி உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-281)

## நெடுங்கேணி வன அலுவலகத்தின் மரம் நடுகை நிகழ்வு



(வவுனியா )

வனப்பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் வன ரோபா மரம் நடுகை நிகழ்வு வவுனியா மாவட்ட நெடுங்கேணி வட்டார வன அலுவலகத்தினால் இந்த வருடம் நெடுங்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள கமநல சேவைகள் திணைக்களத்திற்குட்பட்ட மருதங்குளம் நீரேந்து பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது மருத மீரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக நெடுங்கேணி உதவி பிரதேச செயலாளர்,வவுனியா மாவட்ட கமநல சேவைகள் பிரதி பணிப்பாளர், நெடுங்கேணி வட்டார வன அதிகாரி,வவுனியா வடக்கு பிரதேச சபைத் தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை செயலாளர், நெடுங்கேணி கிராம சேவையாளர், நெடுங்கேணி மகா வித்தியாலய அதிபர், மாணவர்கள், கமநல சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய வன மூடுகையினை அதிகரிக்கும் நோக்கில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (9)





சர்வதேச சிறுவர் முதியோர் தினவிழா கிளிநொச்சி இந்துக்கல்லூரி ஆசிரியர் கழகத்தின் ஏற்பாட்டில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடனும் அதிபர் கி.விக்னராஜாவின் வழிகாட்டலின் கீழ் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி இந்துக் கல்லூரி பொன்சபாபதி மண்டபத்தில் இடம்பெற்றது. மாணவர்களின் கற்றல்செயற்பாட்டை வளப்படுத்தும்முகமாக மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமத்தின் தலைவர் பொன்.நித்தியானந்தனின் நிதியுதவியில் வழங்கப்பட்ட smart board மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிறுவர்கள் மற்றும் மூத்தோர் கௌரவிப்பு இடம்பெற்றது.

## தருமபுரம் பிரிவில் கடந்த ஒன்பது மாதங்களில் மணல் கடத்திய 139 பேரும், கசிப்புடன் 186 பேரும் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 9 மாதங்களில் மணல் கடத்தலில் ஈடுபட்ட 139 பேரும் கசிப்பு விற்பனை மற்றும் உற்பத்தி செய்த 186 பேரும் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் மணல் கடத்தியவர்களிடம் இருந்து 11 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டமும் கசிப்புடன் கைதாகியவர்களிடம் இருந்து 4 இலட்சத்து 54 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டமாக அறவிடப்பட்டுள்ளது.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மணல் கடத்தல் மற்றும் கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் தருமபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின் போது மேற்படி கைது நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன.

இதில் கடந்த 9 மாதங்களில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டதாக 186 பேர் கைது செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து 10 ஆயிரத்து 158 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

மணல் கடத்தலில் ஈடுபட்டதாக 139 பேர் கைது செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து 266 கியூப் மணல் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (9-316)



# பாரதம்

## ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்து 10 பேர் பரிதாபமாக மரணம்



(சென்னை)

இந்தியாவின், மாகாநந்தா ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்தனர்.


கடந்த வியாழக்கிழமை 80 பேரை ஏற்றிக் கொண்டு மேற்கு வங்கத்தின் ராம்பூர்கட் சந்தையில் இருந்து பீகார் மாநிலம் கதிஹார் நோக்கி பயணித்த படகொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர்.

20 க்கும் மேற்பட்டோர் ஆற்றில் மூழ்கிக் காணாமல் போயினர்.

இந்நிலையில், நேற்று அதிகாலை 6 சடலங்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து பலியானவர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்தது. (ஜ-2)

## காஷ்மீர் மக்களுக்காக யாரும் எல்லை தாண்டவேண்டாம்

### இம்ரான் கான் எச்சரிக்கை



(காஷ்மீர்)

காஷ்மீர் மக்களுக்கு உதவுவதற்காகவோ, போராட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்காகவோ யாரும் எல்லை தாண்ட வேண்டாம் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் எச்சரிக்கை விடுத்தார்.

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளை எதிர்த்து பாகிஸ்தானில் வாகனப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. இது குறித்து டுவிட்டரில் கருத்து தெரிவித்த இம்ரான்கான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'காஷ்மீரைச் சேர்ந்த தங்கள் சக காஷ்மீரிகளின் நிலையை பார்த்து வேதனை அடையும் காஷ்மீரிகளின் உணர்வுகளை நான் புரிந்து கொண்டுள்ளேன்.

ஆனால் மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு உதவுவதற்காகவோ, போராட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்காகவோ யாரும் எல்லை தாண்ட வேண்டாம்.

அவ்வாறு தாண்டினால் அது இந்தியாவுக்கு சாதகமாகி விடும்' என்றும் இம்ரான் கான் தெரிவித்தார்.

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து பாகிஸ்தான் தொடர்ச்சியாக அதிருப்தியை வெளிப்படுத்தி வருகிறது.

இதன்காரணமாக சர்வதேசத்தின் உதவியை நாடிய பாகிஸ்தான் இறுதியில் போர் எச்சரிக்கையையும் விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## அமெரிக்கா - கிரீஸ் இடையே பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்து



(வோஷிங்டன்)

அமெரிக்காவிற்கும் கிரீஸிற்கும் இடையே புதிய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

கிரீஸிற்கு சென்றுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் போம்பியோ எதென்ஸில் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தச் சந்திப்பின் முடிவில் அமெரிக்கா மற்றும் கிரீஸிற்கு இடையே திருத்தப்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் என்ற பெயரில் புதிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின்படி, கிரீஸின் Crete பகுதியிலுள்ள Souda விரிகுடாவை தனது கடற்படை, விமானப்படைக்கு அமெரிக்கா பயன்படுத்தவுள்ளது.

அத்துடன், ஆப்கானிஸ்தான் மற்றும் கோசாவோவில் நேட்டோ நடவடிக்கைகளில் கிரீஸ் பங்கேற்கவுள்ளது. பொருளாதாரம், வர்த்தகம், கலாசார விவகாரங்களில் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் அமெரிக்காவும், கிரீஸும் இதன் போது ஒப்புக் கொண்டன. (ஜ-2)

## மக்கள் போராட்டத்

## உயிரிழப்பு 100 ஆ

### 4 ஆயிரம் பே





இந்நிலையில் மோதல்களில் போராட்டக்காரர்கள் பாதுகாப்புப் படையினர் என 100 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுமார் 4 ஆயிரம் பேர் படுகாயமடைந்ததாகவும் ஈராக்கின் மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர் அலி அல்-பயாட்டி தெரிவித்தார்.

ஈராக் அரச துறைகளில் பெருகிவரும் ஊழல் மற்றும் வேலையில்லா பிரச்சினை ஆகியவற்றை எதிர்த்து நடைபெற்றுவரும் போராட்டம் காரணமாக

## ஈராக்கில் உயிரிழப்புகளு சட்டத்தின் முன் நிறு

### ஐ.நா வலியுறுத்து

(ஜெனீவா)

ஈராக்கில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியது.

ஈராக்கிற்கான ஐக்கிய நாடுகளின் உதவி நிலையத்தின் தலைவர் **Jeanine Hennis Plasschaert** இந்த வலியுறுத்தலை முன்வைத்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டங்களில் இதுவரை 100 பேர் உயிரிழந்துள்ள நிலையில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

ஈராக்கில் நிலவும் வேலையின்மை, பொதுச்சேவைகளின் திருப்தியற்ற தன்மை மற்றும் ஊழலுக்கு எதிராகத் தாம் போராடுவதாக போராட்டக் காரர்கள் தெரிவித்தனர்.

கடந்த 5 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் இப் போராட்டத்தில் சுமார் 100 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்தனர்.

# வெளிநாடு

## ...த்தில் வன்முறை ஆக அதிகரிப்பு!

### ...பேர் படுகாயம்



(பக்தாத்)

**ஈராக்கில் அரசுக்கு எதிரான போராட்டம் நாளுக்கு நாள் வலுப் பெற்றுவரும் நிலையில் உயிரிழப்புக்களும் அதிகரித்துள்ளதுடன் இப் போராட்டம் நாட்டின் பல மாகாணங்களிலும் பரவியது.**

அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் பக்தாத்தில் அரசுக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை நடந்த பேரணியில் பெரும் வன்முறை வெடித்தது. இதன்போது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 9 பேர் உயிரிழந்தனர்.

இவ்வாறு பல்வேறு மோதல் சம்பவங்களில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## அமெரிக்காவினுள் நுழையும் அகதிகளுக்கான புதிய திட்டத்திற்கு டொனால்ட் ட்ரம்ப் ஒப்புதல்



(வோஷிங்டன்)

அமெரிக்காவிற்குள் நுழையும் அகதிகள் குறித்த புதிய திட்டம் ஒன்றுக்கு ட்ரம்ப் ஒப்புதல் அளித்தார்.

சுகாதார சேவைக்கு செலவிட முடியாவிட்டால், அமெரிக்காவுக்குள் அகதிகள் நுழைய வேண்டாம் என்ற புதிய திட்டத்திற்கே ட்ரம்ப் இவ்வாறு ஒப்புதல் அளித்தார்.

அகதிகள் விவகாரத்தில், ட்ரம்ப் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகிறார்.

கடந்த மாதம், அமெரிக்காவிற்குள் நுழைய முயன்ற அகதிகளில் 18 ஆயிரம் பேரை மாத்திரம் 2020ஆம் நிதியாண்டில் அனுமதிக்க திட்டமிட்டுள்ளதாக ட்ரம்ப் நிர்வாகம் தெரிவித்தது.

இந்நிலையில் 30 நாட்களுக்குள் சுகாதாரக் காப்பீடு பெற முடியாத அகதிகளை நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டாம் என்ற புதிய திட்டத்தில் ட்ரம்ப், கையெழுத்திட்டார்.

எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி முதல் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் என வெள்ளை மாளிகை அறிவித்தது.

இதற்கமைய அகதிகள் விசா மூலம் அமெரிக்காவுக்குள் நுழைவோர், நிறுவனம் வழங்கும் மருத்துவக் காப்பீடு அல்லது முதியவருக்கான மருத்துவக் காப்பீடு வைத்திருந்தால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-2)


## புதிய செயற்கைக் கோளினை விண்ணிற்கு செலுத்தியது சீனா

(பீஜிங்)

சீனா புதிய செயற்கைக் கோள் ஒன்றினை விண்ணில் செலுத்தியது.

சீனாவின் தையுவான் செயற்கைக்கோள் ஏவுமையத்திலிருந்து, லாங்மார்ச்-4பி ஏவூர்தியின் மூலம், சீனாவின் கோஃபன்-10 எனும் செயற்கைக்கோள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இவ்வாறு விண்ணிற்கு செலுத்தப்பட்டது.

இந்தச் செயற்கைக்கோள் திட்டமிடப்பட்ட புவியின் சுற்றுவட்டப்பாதையைச் சென்றடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.



நிலவளக் கணக்கெடுப்பு, நகரக் கட்டுமானத் திட்ட வரைவு, நெடுஞ்சாலை வலைப்பின்னல் திட்டவரைவு, பயிர் விளைச்சல் மதிப்பீடு, பேரிடர் நீக்கம் உள்ளிட்ட பணிகளுக்கு இந்த செயற்கைக் கோள் பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## ...ளுக்கு காரணமானவர்கள் ...றுத்தப்பட வேண்டும்



இந் நிலையில் உயிரிழப்புக்களுக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார். (ஐ-2)

## பேச்சுவார்த்தையை முறித்த ட்ரம்ப்; அமெ.தூதரை சந்தித்த தலிபான்கள்

(காபூல்)

இஸ்லாமாபாத்தில் அமெரிக்க அமைதி தூதர் ஜல்மே கலீல்ஜாத்தை நேற்று முன்தினம் முல்லா அப்துல் கனி பரடர் தலைமையிலான தலிபான் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

ஆப்கானிஸ்தானில் 19 ஆண்டுகளாக போர் நடந்து வருகிறது. இதை முடிவுக்கு கொண்டுவர தலிபான் பயங்கரவாதிகளுடன் அமெரிக்கா நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி வந்தது.

இரு தரப்பும் ஒப்பந்தம் ஒன்றை எட்டுகிற நிலையும் உருவானது.

ஆனால் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினரை குறிவைத்து தலிபான்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்திவந்ததால், பேச்சுவார்த்தையை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முறித்துக் கொண்டார்.



இந்நிலையில், பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமெரிக்க அமைதி தூதர் ஜல்மே கலீல்ஜாத்தை நேற்று முன்தினம் முல்லா அப்துல் கனி பரடர் தலைமையிலான தலிபான் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர். (ஐ-2)

# பலாலியில் தரையிறங்கும் அலையன்ஸ் விமானம்

(கொழும்பு)

எயார் இந்தியா விமான நிறுவனத்தின் துணை நிறுவனமான அலையன்ஸ் எயார் நிறுவனத்தின் விமானம், எதிர்வரும் 14 ஆம் திகதி பலாலி விமான நிலையத்தில் முதலாவதாக தரையிறங்கவுள்ளதாக, சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை அறிவித்தது.

யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையம் எனப் பெயரிடப்பட்டுள்ள பலாலி விமான நிலையப் புனரமைப்புப் பணிகள் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இதன் திறப்பு விழாவின் அடையாளமாகவே, அலையன்ஸ் எயார் விமானம் தரையிறங்கவுள்ளது.

சென்னையில் இருந்து வரும் முதல் விமானம் சுற்றுலாப் பயணிகளையும், வணிகப் பிரமுகர்களையும் யாழ்ப்பாணத்துக்கு ஏற்றி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அலையன்ஸ் எயார் நிறுவனம் தொடர்ந்து, யாழ்ப்பாணம் மற்றும் தற்போது புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வரும் மட்டக்களப்பு அனைத்துலக விமான நிலையங்களுக்கு சென்னையில் இருந்து சேவைகளை நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மட்டக்களப்புக்கான சேவைகள் விரிவாக்கப்படும் வரை சென்னை- யாழ்ப்பாணம் இடையில் சேவைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# மாற்று இனங்களால் தமிழர்களுக்கு ஆபத்து

## இரா.துரைரெத்தினம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**கடந்த காலங்களில் மாற்று இனங்களால் அதிகார அரசியல் ஊடாக தமிழர்கள் பலவீனமாக்கப்பட்டதைப் போல இனிவரும் காலங்களில் தமிழர்கள் காணாமல் போகும் நிலை ஏற்படலாமென கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரான இரா.துரைரெத்தினம் எச்சரிக்கை விடுத்தார்.**



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"ஏனைய இனங்கள் உள்ள மாவட்டத்திலுள்ள தமிழர்களைப் பொறுத்தவரையில், சுமார் முப்பது வருடங்களுக்கு மேல் அரசியல் ரீதியாகவும், அரச நிர்வாக ரீதியாகவும், அபிவிருத்தி தொடர்பாகவும் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும் உள்ளூராட்சி, மாகாணசபை, நாடாளுமன்றம், ஜனாதிபதித் தேர்தல் அனைத்திலுமுள்ள அதிகாரத்தை பெறுவதற்கான உரிமைகள் தமிழ் மக்களுக்குண்டு.

இதனூடாக அரசியல் விடயம், அரச நிர்வாக விடயம், அபிவிருத்தி விடயங்களில் எமக்கான உரிமைகளைப் பெறவேண்டும்.

இவ்விடயங்களில் பார்வையாளராக தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அப்படி நாம் பார்வையாளராக இருக்கும் பட்சத்தில் குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் இல்லாமல் போகும் நிலை ஏற்படும்.

மாற்று இனங்களால் அதிகார அரசியல் ஊடாக தமிழர்கள் கடந்த காலத்தில் பலவீனமாக்கப்பட்டதைப் போல இனிவரும் காலங்களில் தமிழர்கள் காணாமல் போகும் நிலை ஏற்படும்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் மக்களிடம் உள்ளது வாக்குப்பலம் மட்டுமே. அந்த வாக்குப்பலத்தை தமிழ் மக்கள் நிலையான அபிவிருத்திக்கும், அதிகாரப் பரவலாக்கலுக்கும், ஏனைய இனங்களின் அடக்குமுறையில் இருந்து விடுவிப்பதற்கும், தொழில் வாய்ப்பு போன்ற விடயங்களுக்கும் சார்பாக வாக்களிக்கத் தயாராக இருக்கின்றார்கள்.

மேலும் உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய சமூகம் தமிழ் சமூகம். அதிகாரம் தொடர்பாக எந்தத் தீர்வும் முன்வைக்கப்படவில்லை என மிகவும் வலியோடு இருக்கும் சமூகம் எமது சமூகமாகும்.

எனவே தமிழ் சமூகத்தை மீண்டும் விரக்தி நிலைக்கு கொண்டு செல்ல வேண்டாம்" என மேலும் தெரிவித்தார். (ஜ)

# பேஸ்புக் பயன்படுத்துபவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையர்கள் தங்கள் பேஸ்புக் கணக்குகளை பாதுகாத்துக் கொள்ளுமாறு இலங்கைத் தகவல் தொழில்நுட்ப சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் சந்தர்ப்பத்தில் பல்வேறு அரசியல் கருத்துக்களை தங்கள் சமூக வலைத்தள கணக்குகளில் பகிரும் பயனாளர்களின் கணக்குகள் அடையாளம் தெரியாத நபர்களின் கைகளுக்கு செல்லும் வாய்ப்புகள் உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அடையாளம் தெரியாத தரப்பினரால் போலியாகத் தயாரிக்கப்பட்ட சமூக வலைத்தளம் ஊடாக, பயனாளர்களை நுழைய வைத்து அதில் தங்கள் பெயர் மட்டும் கடவுச்சீட்டை பதிவிடுமாறு கோருகின்றனர்.

அதன் ஊடாக அந்த தரவுகளை திருடிக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சங்கத்தின் தலைவர் ரஜீவ யசிரு குரு விட்டகே மெத்திவ் தெரிவித்துள்ளார்.

குறைந்த பாதுகாப்பு முறையைப் பயன்படுத்தும் பயனாளர்கள் மிக இலகுவாக அடையாளம் தெரியாதவர்களின் கைகளுக்கு செல்வதற்கு வாய்ப்புகள் உள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் **two factor authentication** என்ற வசதியை பயன்படுத்துமாறும் அல்லது **Google authenticator** என்பதனைப் பயன்படுத்துமாறு இலங்கை சமூகவலைத்தள பயனாளர்களுக்கு மேலும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனநோயின் அறிகுறிகள்

உடம்பில் வியாதி வந்தால் அதை கண்டுபிடிப்பதற்கு எவ்வளவு வசதிகள் வந்திருக்கு. உடம்புக்குள் என்ன எங்கே கோளாறுகள் இருக்கிறது என்பதை வெளியில் இருந்தே பார்த்துக்கொள்ளலாம்!

ஆனால் மனசுக்குள் வியாதி வந்தால் அதை கண்டுபிடிப்பதற்கு அதிகமான சாமர்த்தியம் வேணும். உடம்பில் ஒரு வியாதி இருந்தால் வியாதி உள்ளவரே சொல்லிவிடுவார். எனக்கு வயிறு வலிக்குது, கால் வலிக்குது என்று!

ஆனால் மனதில் வியாதி உள்ளவர் "சேர் எனக்கு 'மனநோய் வந்திருக்கு' பார்த்து சரி பண்ணுங்க!" என்று சொல்லிக்கொண்டிருக்க மாட்டார்.

பக்கத்துலே இருப்பவங்க தான் அதை கவனிச்சு பார்த்து கண்டுபிடிக்கனும்.

"ஆள் ஒரு மாதிரியாக இருக்கிறாரே! என்னவாக இருக்கும்?" என்று அக்கறையாக கவனிக்கனும்.

மன நோய்க்கு சில அறிகுறிகள் உண்டு!

அதைத் தெரிந்து வைத்திருந்தோம் என்றால் அடுத்தவர்களை கவனித்துப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். அது மட்டுமல்ல ஆரம்பத்திலேயே கண்டு பிடிச்சு அதுக்குத் தகுந்த மாதிரி வைத்தியம் பண்ணி குணப்படுத்திக் கொள்ளலாம்!

முதல் அறிகுறி தூக்கம் வராமல் இருக்கிறது தான்!

உறக்கமின்மை, மன உளைச்சல், மன இறுக்கம், கவலை இதெல்லாம் தூக்கம் வராமல் இருப்பதற்கு காரணம்! அதனாலே நரம்புத் தளர்ச்சி வந்து விடுகிறது!

எதுக்கெடுத்தாலும் திடீரென்று கோபம், எரிஞ்சு விழுகிறது, வேலை செய்வதிலே ஒரு உற்சாகம் இல்லாமல் இருக்கிறது எல்லாம் வந்துவிடும். சில பேர் திருப்பி திருப்பி ஒரே காரியத்தை செய்து கொண்டிருப்பார்கள்.

உதாரணத்துக்கு கை சுத்தமா இல்லையென்று நினைத்துக்கொண்டு ஒருவன் திருப்பி திருப்பி கை கழுவிக்கொண்டிருப்பான். அவனுக்கு கூட தெரியும்... என்ன இது முட்டாள் தனமான நினைப்பா இருக்கே! என்று இருந்தாலும் அதை விட முடியாமல் ஒரு வகையான தவிப்புக்கு உள்ளாகிவிடுகிறான்.

நாம எதுக்கும் லாயிக்கில்லாதவன் என்ற ஒரு விரக்தி எண்ணம் அதிகமாக கவலைப்பட ஆரம்பிக்கிறான் பாருங்க. அதுவே ஒரு ஆரம்ப நிலையாக இருக்கலாம்.

எதிர்காலத்தைப் பற்றிய பயம்... அவ நம்பிக்கை அழிவு ஏற்படப்போகிறது என்ற உள்ளுணர்வு காரணமாக துயரப்படுகிறது அழிவை நோக்கக்கூடிய ஒரு எதிர்பார்ப்பு எண்ணம் உண்டாகிறது. இதெல்லாம் கூட ஒரு வகை மனநோயின் அறிகுறிகள் தான்!

சிலபேருக்கு.. அடுத்தவங்க நம்மளைப் பத்தி தப்பா நினைக்கிறாங்க அப்படி என்ற சந்தேகம் வந்துவிடும்... அப்படி அவங்க நினைக்கக்கூடாது என்றதுக்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏதாவது செய்ய துடிப்பது உண்டு.

சில பேர் எப்படியென்றால்... பிரச்சினைகளை சமாளிப்பதற்கு, தவறுகளை மறைப்பதற்கு... தனக்கு இல்லாத நோய்களை இருப்பதாக சொல்லிக்கொண்டு மத்தவங்களோட அனுதாபத்தை பெற முயற்சி செய்வது உண்டு. அதை பெரிசு படுத்தி மன எழுச்சியோட வெளிப்படுத்துவது. இதெல்லாம் "ஹிஸ்டீரியா" நோயின் அறிகுறி!

சிலபேருக்கு தன்னிலையை வெளிப்படுத்த முடியாது. எதுலேயும் ஆர்வம் இருக்காது. அளவுக்கு அதிகமாக பணிவாக நடந்து கொள்வாங்க. இது இன்னொரு மனநோயின் அறிகுறி.

அர்த்தமில்லாம பயப்படுவது. ஆட்டிப் படைக்கிற எண்ணங்களிலிருந்து விடுதலை பெற முடியாமல் போய்விடுகிறது. இதுவும் அதுக்கு அறிகுறிதான்.

இன்னொரு வகையான மனநோய் உண்டு.

அளவுக்கு அதிகமான கவனத்தோட திட்டத்தை தீட்டுறது, செயல்களை செய்வதிலே அதிகமான தீவிரத்தைக் காட்டுவது. தனக்கு அதிக சக்திகள் இருப்பதாக உணர்வது, வீணான சந்தேகம், விதண்டாவாதம் செய்யும் மனப் போக்கு இதெல்லாம் அதுக்கு ஆரம்ப அறிகுறி.

சிலபேர் எப்படியென்றால் சுலபமாக கோபப்படுவது. பணிவில்லாமல் நடப்பது, திருடுவது, பொய் சொல்வது, ஒத்துழைக்க மறுக்கிறது, எதிர்மறையாகச் செய்வது, இது மாதிரி குழந்தைத்தனமா இருப்பாங்க.

தன்னுடைய கருத்துக்களை தவறான ஆதாரங்களோட அடிச்சு சொல்வது இருக்கு பாருங்க.. அது கூட மனநோயின் ஒரு அறிகுறிதான்!

இது மாதிரி அறிகுறிகளை வைத்து.. எந்த வகை மனநோய் என்பதை கண்டுபிடித்து வைத்தியம் பண்ண வேண்டும்.

இன்னொரு சம்பவம் சொல்கிறேன்... அவரை எந்த ரகத்திலே சேர்க்கலாம் என்பதை நீங்களே முடிவு பண்ணுங்க.

ஒருத்தர் ஒரு ஆழமான கிணத்துக்கு பக்கத்திலே நின்றுகொண்டு "பதினெட்டு" "பதினெட்டு" "பதினெட்டு" என்று திருப்பி திருப்பி சொல்லிக்கொண்டே நின்று கொண்டிருந்தார்.

அந்த வழியாக போன ஒரு பெரிய மனுசன் இதை கவனித்தார்.

உடனே அவரிடம் போய் என்ன இது? எதை எண்ணிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டார். உடனே அவர் இவரைப் பார்த்தார்.பதில் எதுவும் சொல்லவில்லை...பிடித்து அந்த கிணத்துக்குள்ளே தள்ளிவிட்டார்...

தள்ளி விட்டு விட்டு மறுபடியும் "பத்தொன்பது" "பத்தொன்பது" அப்படியென்று எண்ண ஆரம்பித்து விட்டார்!

# இராணுவத்தினரின் அர்ப்பணிப்பினாலேயே


# ஆக்கிரமிப்புக்களைத் தடுக்க முடிந்தது

## அதிரடிப்படையினருக்கு ஜனாதிபதி பாராட்டு

(கட்டுக்குறுந்த)

அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்கெதிராக தொடுக்கப்பட்ட எதிரிகளின் ஆக்கிரமிப்புக்கள் அச்சுறுத்தல்களிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு வீரமிக்க இராணுவத்தினரின் அர்ப்பணிப்பினாலேயே முடிந்ததென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.













கட்டுக்குறுந்த விசேட அதிரடிப்படை பயிற்சிப் பாடசாலையின் 76ஆவது ஆரம்பப் பயிற்சியை நிறைவு செய்த அதிகாரிகளின் பயிற்சி நிறைவு விழா ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்டுக்குறுந்த விசேட அதிரடிப்படையின் பயிற்சிப் பாடசாலையில் 76ஆவது ஆரம்பப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த 50 பொலிஸ் பரிசோதகர்கள், 183 பொலிஸ் கான்ஸ்டபிள்கள், 41 பொலிஸ் பெண் கான்ஸ்டபிள்கள் என்ற அடிப்படையில் மொத்தமாக 274 பொலிஸ் அதிகாரிகள் பயிற்சியை நிறைவு செய்தனர்.

முதலில் பயிற்சிப் பாடசாலையின் இராணுவ நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்திய ஜனாதிபதி, அந்த வளாகத்தில் இரசாயன வேதியியல், உயிரியல், கதிரியக்க, அணு மற்றும் வெடிபொருட்கள் பாதுகாப்பு இயக்க கண்காட்சி தேசிய நிலையத்தையும் திறந்து வைத்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, அரசாங்க சேவையில் ஈடுபட்டோருக்கு மக்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்தபோதிலும், பொலிஸ் அதிரடிப்படைக்கு அத்தகைய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவில்லை.

1980களின் ஆரம்ப காலப் பகுதியில் வட, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட அரசாங்கத்திற்கு எதிரான பயங்கரவாதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ் அதிரடிப்படை உருவாக்கப்பட்டதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அன்று தொடக்கம் இன்று வரை கடமையின்போது உயிரிழந்த மற்றும் அங்கவீனமுற்ற இராணுவத்தினருக்கு தேசத்தின் மரியாதை உரித்தாகும் என்றும் தெரிவித்தார்.

கண்கவரும் வேடிக்கை நிகழ்வுகள், வாத்திய அணிவகுப்பு, பரசூட் சாகசங்கள் போன்ற நிகழ்வுகளால் இவ்விழா வண்ணமயமாகியது.

பயிற்சிகளின்போது விசேட திறமைகளை வெளிக்காட்டிய 6 அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பதக்கங்களை வழங்கினார்.

இராஜாங்க அமைச்சர் பாலித தேவப்பெரும, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சாந்த கோட்டேகொட, மேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில், பதில் கடமை பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டது.

சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய இதனைத் தெரிவித்தார்.

இந்த அதிகரிப்பு நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், இதுகுறித்து விவசாயிகள் விழிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் கோரினார்.

இதேவேளை, மழையுடனான காலநிலை நிலவும் சந்தர்ப்பங்களில் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகமாகக் காணப்படுவதாகவும் இதற்கு முன்னர் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.தே.கவிற்கு 4 வருடங்களாக கஷ்டப்பட வேண்டி ஏற்பட்டது

## கிரியெல்ல கவலை

(கொட்டியகஹ)

அரசுக்கு ஆதரவான ஜனாதிபதி ஒருவர் இல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சி கடந்த 4 வருடங்களாக கஷ்டப்பட வேண்டி ஏற்பட்டதாக அமைச்சர் லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

செங்கடகல, கொட்டியகஹ பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளும் தமது கட்சியின் கொள்கைகளும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அடிக்கடி திறனாய்வுக்குள்ளாகும் 13 வது திருத்தம்-பகுதி II

# எது சரி எது பிழை - ஒரு தொகுப்பு

04

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



நியதிச்சட்டங்களை மாகாண சபைகளில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் மாகாணசபைகள் சட்டமா அதிபரைக் கலந்தாலோசிக்க வேண்டும். நியதிச்சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் இறுதி அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னரே அவை நடைமுறைக்கு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட நியதிச்சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அதன் யாப்புறு தன்மையைத் தீர்மானிப்பதற்கு உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்துமாறு கோரி அதனை ஜனாதிபதிக்கு அனுப்பும் அதிகாரம் ஆளுநருக்கு உண்டு. அந்த நியதிச் சட்டம் யாப்புக்கு இயைபானதாகும் என்று உயர் நீதிமன்றம் முடிவு செய்தால் மட்டுமே ஆளுநர் அதற்கு இறுதி அங்கீகாரம் வழங்க முடியும்.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் மாகாண ஆளுநர்கள் நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விதம் பற்றி ஜனாதிபதி கட்டளைகளை பிறப்பிக்கலாம். அவற்றின்படியே ஆளுநர்கள் செயற்பட வேண்டும் என்பதும் மாகாணசபைகள் எதிர்நோக்கும் பாரிய சவாலாகும்.

### முதலாம் மற்றும் மூன்றாம் நிரல்களில் உள்ள குறைபாடுகளும் தலையீடுகளும்

முதலாம் மற்றும் மூன்றாம் நிரல்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் தலையீடுகள் பற்றி யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் பின்வருமாறு "13 ஆவது திருத்தம் - சில அறிமுகக் குறிப்புகள்" எனும் கையேட்டில் எழுதியுள்ளார்.

ஒருங்கிணை நிரல் தொடர்பில் மத்திய பாராளுமன்றம் இயற்றும் சட்டம் மாகாண சபை சட்டத்திலும் மீயுயர்வானது. இதன் காரணமாக நடைமுறையில் ஒருங்கிணை நிரலும் மத்திய அரசாங்கத்திற்குரியதே. மேலும் இந்நிரல்களுள் ஏதேனும் விடயம் ஒதுக்கப்படாத விடத்து அவ்விடயமும் மத்திய அரசின் நிரலுக்குட்பட்ட விடயமாகவே கருத வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய கொள்கை உருவாக்கம் என்ற பெயரில் எவ்விடயம் தொடர்பிலும் (மாகாண சபை நிரல் விடயங்கள் உட்பட) மத்திய பாராளுமன்றம் சட்டமியற்றலாம். வெறுமனே ஓர் அமைச்சுச் சுற்றுநிருபம் மூலம் கூட தேசிய கொள்கையை உருவாக்கப்படுவதாக உயர் நீதிமன்றத்தால் தீர்க்கப்பட்டுள்ளது. மாகாண சபை நிரலில் உள்ள எவ்விடயம் தொடர்பிலும் பாராளுமன்றம் 2/3 பெரும்பான்மையுடன் சட்டமியற்றலாம். அவசர கால சட்டமொன்றின் மூலமாக மாகாண சபை நிரலில் உள்ள எவ்விடயம் தொடர்பிலும் சட்டமியற்றலாம் மாகாணசபைக் சட்டமொன்றை வலிதற்றதாக்கலாம். மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள் கூட அரைகுறையாகவே வழங்கப்பட்டுள்ளன உதாரணமாக சுகாதாரம் மாகாணசபை நிரலிற்குள் உள்ளடக்கப்பட்டாலும் போதனா வைத்திய சாலைகள் மத்தியின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இயங்கும். மருந்துகளை வாங்கும் அதிகாரமும் மத்திக்கே உரியதாகும். பாடசாலைகள் மாகாணசபை நிரலிற்குள் உள்ளடக்கப்பட்டாலும் தேசிய பாடசாலைகள் தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தினாலேயே பரிபாலிக்கப்படும். மாகாண சபைக்கு குறித்தொதுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் மாகாண சபை 'பாராளுமன்றத்தினால் சட்டமொன்றின் மூலமாக வழங்கப்படும் கட்டுப்பாடுகளிற்கு உட்பட்டு' சட்டமியற்றலாம் என்ற வாசகம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக கடன் வாங்குதல், சூழல் பராமரிப்பு, கனியவள விருத்தி, (பெரும்பாலான, முக்கியமான) வரிவிதிப்பு. ஆகவே இவை 'மாகாண விடயங்களாக' இருந்தாலும் இவை தொடர்பில் பாராளுமன்றம் சட்டவாக்கம் செய்யலாம். இவ்வாறு அவர் தனது கைநூலில் குறிப்பிட்டுள்ளார்.

> முதலாம் மற்றும் மூன்றாம் நிரல்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் தலையீடுகள் பற்றி பல சட்டவல்லுநர்கள் பல இடங்களில் சுட்டிக்காட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.
>
> குறிப்பாக கூறப்பட்ட 3 நிரல்களுள் ஏதேனும் விடயம் ஒதுக்கப்படாதவிடத்து அவ்விடயமும் மத்திய அரசின் நிரலுக்குட்பட்ட விடயமாகவே கருத வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### மூன்று நிரல்களின் ஒப்பீடு

இந்த மூன்று நிரல்களையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது மாகாண சபை நிரலில் மட்டும் காணப்படும் விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

மாகாணசபை நிரலில் (நிரல் 1) மட்டும் காணப்படும் விடயங்கள். விடய இலக்கம் / பந்தி இலக்கம் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.

#### பொதுச்சேவைகள் (General Public Services)

- போதையூட்டும் மது பானங்களை உடைமையில் வைத்திருத்தலும், இடம் பெயர்த்தலும், கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும். (நிரல் 1, பந்தி 23)
- மாகாணக்கடன் (நிரல் 1, பந்தி 31)

#### பொருளாதார சேவைகள் (Economic Services)

- மாகாணத்தினுள் வீதிப் பயணிகள் வண்டிச் சேவைகளையும் மோட்டார் வாகனங்களின் மூலம் பண்டங்களை ஏற்றிச்செல்வதையும் ஒழுங்கு படுத்தலும் மாகாணங்களுக்கு இடையேயான வீதிப் போக்குவரத்துச் சேவைகளை ஏற்பாடு செய்தலும். (நிரல் 1, பந்தி 8 )
- கிராமிய அபிவிருத்தி (நிரல் 1, பந்தி 10)
- வாடி வீடுகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் பராமரிப்பு (நிரல் 1, பந்தி 13)
- வங்கிகளினால்கொண்டு நடத்தப்படும் அடைவு பிடிப்போர் தொழில் அல்லாத அடைவு பிடிப்போர். (நிரல் 1, பந்தி 14)
- சந்தைகள், முறைச் சந்தைகள்(நிரல் 1, பந்தி 15)
- மாகாணத்தினுள் உணவு வழங்கலும் விநியோகித்தலும் (நிரல் 1, பந்தி 16)
- கூட்டுறவுகள்-(நிரல் 1, பந்தி 17,17:1,17:2,17:3,17:4)
  - மாகாணத்தினுள் கூட்டுறவு பொறுப்பு முயற்சிகளும், கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்கு படுத்தலும், பதிவுசெய்தலும், மேற்பார்வை செய்தலும், கணக்காய்வு செய்தலும்.
  - கூட்டுறவுக் கல்வியும் பிரசாரமும் உட்பட மாகாணத்தினுள் கூட்டுறவு அபிவிருத்தி.
  - மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு
  - மாகாண கூட்டுறவுச் சங்க ஊழியர்களைத் தொழிலுக்கமர்த்துதல், அவர்களின் பதவியுயர்வு, ஓய்வுபெறுகை சம்பந்தமான கருமங்களும் அத்துடன் வேறு சம்பந்தப்பட்ட கருமங்களும்.
- தேசிய ஞாபகார்த்த மயானங்களெனப் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, புதைத்தல்களும் இடுகாடுகளும், தகனங்களும், சுடுகாடுகளும். (நிரல் 1, பந்தி 24)
- கூட்டிணைக்கப்படாத வியாபார, இலக்கிய, விஞ்ஞான, சமய, அத்துடன் வேறு சங்கங்களையும் கழகங்களையும் ஒழுங்கு படுத்துதல் (நிரல் 1, பந்தி 28)
- பந்தயம் மற்றும் சூதாட்டம் (அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வரி தவிர (நிரல் 1, பந்தி 30)
- ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக. மாகாண நிரலிலுள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான கட்டணங்கள். (நிரல் 1, பந்தி 33)
- பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு பணம் கடன் பெறல். (நிரல் 1, பந்தி 35)
- பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு வரி அறவிடல் (நிரல் 1, பந்தி 36)

#### மனித வள மேம்பாடு மற்றும் சமூக பாதுகாப்பு (Human resources development and social protection)

- சுதேச வைத்தியம் (நிரல் 1, பந்தி 12)
- சீர்திருத்தும் நிலையங்களும் சிறுவர் நன்னடத்தை நிறுவனங்களும் (நிரல் 1, பந்தி 22)

#### பொழுதுபோக்கு, கலாசாரம் மற்றும் மதம் (Recreation Culture and Religion)

- திரையிடப்படுவதற்கும் பகிரங்க அரங்காட்டுகளுக்குமான திரைப்படச் சுருள்களை அனுமதித்தல் நீங்கலாக, படமாளிகைகள், நாடக அரங்காட்டுகள், சங்கீதம், திரைப்படம், களியாட்டங்கன் அத்துடன் பொழுது போக்குகள். (நிரல் 1, பந்தி 29:1)

மேற்கூறப்பட்ட விடயங்கள் மட்டுமே மாகாண சபை நிரலில் மற்றைய இரு நிரல்களுடனும் தொடர்பு படாமல் உள்ளன. எனவே இவ் விடயங்கள் சம்பந்தமாக மாகாண சபையால் இலகுவாக தேவையான நியதிச் சட்டங்களை ஆக்கிக்கொள்ள முடியும்.

பொதுச்சேவைகள் (General Public Services), பொருளாதார சேவைகள் (Economic Services), மனித வள மேம்பாடு மற்றும் சமூக பாதுகாப்பு (Human resources development and social protection) , மற்றும் பொழுதுபோக்கு, கலாசாரம் மற்றும் மதம் (Recreation Culture and Religion) ஆகிய விடயங்களின் ஒரு சில பகுதிகளுக்கு மட்டுமே மாகாண சபைக்கு அதிகாரம் காணப்படுகிறது. இவ் விடயங்களைப் பார்க்கும் போது மாகாண சபைக்கு அதிகாரப் பகிர்வு கொடுக்கப்பட்டுள்ளதா? என்பது தெரியவில்லை.

> மாகாண சபை நிரலில் மொத்தமாக 37 விடயங்கள் காணப்பட்டாலும் அவற்றுள் கிட்டத்தட்ட 19 விடயங்கள் ஏதாவதொரு வடிவத்திலாவது மத்திய அரசாங்கத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள (16 விடயங்களுள்) ஒதுக்கிய நிரலுள் அல்லது ஒருங்கிணைந்த நிரலுள் (36 விடயங்களுள்) தொடர்புபட்டு காணப்படுகின்றன. எனவே இந்த 19 (மாகாண சபை நிரலிலுள்ள) விடயங்கள் சம்பந்தமாக நியதிச் சட்டங்களை ஆக்குவது ஒரு மாகாணசபைக்கு இலகுவான காரியமல்ல.

மாகாண சபை நிரலில் மொத்தமாக 37 விடயங்கள் காணப் பட்டாலும் மேற்கூறப்பட்ட 18 விடயங்களுக்கு மட்டுமே இலகுவாக நியதிச் சட்டங்களை ஆக்க முடியும். மிகுதி 19 விடயங்களும் ஏதாவதொரு வடிவத்தில் மத்திய அரசாங்கத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள (16 விடயங்களுள்) ஒதுக்கிய நிரலுள் அல்லது ஒருங்கிணைந்த நிரலுள் (36 விடயங்களுள்) தொடர்புபட்டு காணப்படுகின்றன.

எனவே இந்த 19 (மாகாண சபை நிரலிலுள்ள) விடயங்கள் சம்பந்தமாக நியதிச் சட்டங்களை ஆக்குவது ஒரு மாகாணசபைக்கு இலகுவான காரியமல்ல. இவ் விடயங்கள் சம்பந்தமான நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி பெற வேண்டியேற்படும்.

"இங்கு சிக்கலான காரணி என்னவெனில் மத்திய மற்றும் மாகாணங்களின் இயலுமைகள் குறித்த நியாயமான எல்லைகளைத் தீர்மானிப்பது ஆனது அச்சொட்டற்றதாக இருப்பதும் அநேகமாக 3 நிரல்களிலும் விடயங்கள் பங்கிடப்பட்ட விதம் முரண்பாடாக இருப்பதும் ஆகும்.

**தொடரும்...**

**மத்திய அரசாங்கப் பட்டியல் (16 விடயங்களுடாக) நிரல் II**

- நாட்டின் கிராம அபிவிருத்தி பாதுகாப்புக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகள் (முப்படை, தேசிய பொலிஸ்படை)
- தபால், தந்திப்போக்குவரத்து, வானொலி, தொலைக்காட்சி
- நீதிமன்ற நடவடிக்கைகள், உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம்
- தேசிய வளங்கள் நிதி நடவடிக்கைகள் வெளிநாட்டு வளங்கள் தொடர்பானவை
- வெளிநாட்டு வியாபாரம், மாகாணங்களுக்கிடையிலான வர்த்தக நடவடிக்கைகள்
- துறைமுகம், கப்பற் போக்குவரத்து, கடற்போக்குவரத்து நடவடிக்கைகள்
- விமான போக்குவரத்து விமான நிலையங்கள் தொடர்பான நடவடிக்கைகள்
- தேசிய போக்குவரத்து
- ஆறுகள் நீர்நிலைகள், தொடர்பான நடவடிக்கைகள்
- காணி வளங்கள், சுரங்க நடவடிக்கைகள்
- குடிவரவு, குடியகல்வு பிரசாவுரிமை, தொடர்பான நடவடிக்கைகள்
- தேர்தல் நடவடிக்கைகள்
- குடிசன மதிப்பு நடவடிக்கைகள்
- தேசிய வடிகாலமைப்பு தொடர்பான நடவடிக்கைகள்
- தேசிய அளவை, நிறுவை தொடர்பான நடவடிக்கைகள்
- மாகாணங்களுக்கிடையிலான குடி நகர்வு தொடர்பான நடவடிக்கைகள்
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகள் இதில் சுருக்கமாக காட்டப்பட்டுள்ளன.

## திருட்டுப்போன நகைகள், பணம் மீட்பு



கண்டி மாவட்டத்தின் தலாத்து ஓயா பத்திரகாளியம்மன் ஆலயத்தில் கடந்த மாதம் 25.09.2019 திருடப்பட்ட தங்க ஆபரணங்கள், பணம் தலாத்து ஓயா பொலிஸ் பொறுப்பதிகாரி அருண கிசாந்த தலைமையிலான பொலிஸ் குழுவினரால் நேற்று மீட்கப்பட்டன. (இ-10)

# வீட்டுத்திட்டப் பயனாளிகளின் அவலநிலை!

# தமிழ்க் கூட்டமைப்பினருக்குத் தெரியாதா?

# ரணிலைக் காப்பாற்றியவர்கள் மக்களைக் கைவிட்டனர்

## டக்ளஸ் எம்.பி.குற்றச்சாட்டு



**(யாழ்ப்பாணம்)**

**வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் வீட்டுத்திட்டப் பயனாளிகளின் அவலநிலை தொடர்பில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பாத தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ரணில் அரசாங்கத்தைக் காப்பாற்றியது போல மக்களைக் காப்பாற்றத் தவறி விட்டனர் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா குற்றம் சாட்டினார்.**

கடந்த பாராளுமன்ற அமர்வில் வடக்கு வீட்டுத்திட்ட பயனாளிகளின் அவலநிலை தொடர்பில் டக்ளஸ் தேவானந்தாவால் எழுப்பப்பட்ட கேள்வி தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் இடம் பெறுமெனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் வடக்கு வீட்டுத்திட்ட நிதிப்பிரச்சினை சம்பந்தமாக துறைசார் அமைச்சர் சஜித் பிரேமதாஸவிடம் பல கேள்விகளைத் தொடுத்திருந்தேன்.

நான் கேள்வி கேட்டபோது குறித்த அமைச்சர் பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்காத நிலையில் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல எதிர்வரும் பாராளுமன்ற அமர்வில் குறித்த அமைச்சர் பதிலளிப்பார் எனக் கூறினார்.

தமிழ் மக்களை உசுப்பேத்தி வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்ற கூட்டமைப்பினருக்கு வடக்கு வீட்டுத்திட்டப் பயனாளிகளின் அவல நிலை புரியவில்லையா? இல்லை அறிந்தும் அறியாதவர் போல் நடிக்கிறார்களா? எனத் தெரியவில்லை.

பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை எதிர்த்தவர்கள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்கு எதிராக நீதிமன்றம் சென்றவர்கள் ஏன் தமிழ் மக்களின் வீட்டுத்திட்டப் பிரச்சினை தொடர்பில் பாராளுமன்றத்தில் மௌனம் காக்கிறார்கள்.

தமிழ் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தருகிறோம் எனக் கூறியவர்கள் தற்போது ரணில் அரசாங்கம் தம்மை ஏமாற்றி விட்டதாகப் புலம்பத் தொடங்கிவிட்டனர்.

ஏமாற்றப்படுகிறோம் எனத் தெரிந்தும் ஏமாறவில்லை எனப் பாசாங்கு செய்தவர்களுக்கு கம்பரெலிய மட்டுமே பரிசாகக் கிடைத்தது.

கம்பரெலிய வீதிப் புனரமைப்பிலும் கூட பெயர்ப்பலகையை வைப்பதில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் அதிகமாக இடம் பெற்று வருகின்றன.

கூட்டமைப்பில் உள்ள பல கட்சிகளின் ஆதரவாளர்கள் இருக்கும் இடங்களில் ஒரு வீதியை, ஒரு கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒரு பகுதியில் ஆரம்பிப்பார். மற்றைய கட்சியினர் மறு பகுதியில் ஆரம்பிப்பார். இங்கு வேடிக்கை என்னவென்றால் வீதி ஒன்று பெயர்ப்பலகை இரண்டு.

அதுமட்டுமல்லாது, இடை நடுவில் பிறிதொரு கட்சி சார்பானவர்கள் இருந்தால் இடைப்பட்ட வீதி முழுமை பெறாமலேயே போகும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

எமது ஆட்சிக் காலத்திலே தான் வடக்கிற்கான அதிகமான அபிவிருத்திகள் வழங்கப்பட்டதை யாராலும் மறுத்துவிட முடியாதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)



"நிலத்தடிநீர் சேமிப்பும் சுத்தமான காற்றை சுவாசித்தல்" எனும் தொனிப்பொருளில் கார்த்திகை மாத நிலைபேண் அபிவிருத்திச் செயற்பாடாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மரம் நடுகை தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தனின் வழிகாட்டலில், சுற்றாடல் மன்றத்தினது ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விரிவுரையாளர்கள், யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரிய மாணவர்கள், பெற்றோர்கள்,ஊழியர்கள், பொதுமக்கள் இணைந்து தேசிய கல்வியியற் கல்லூரி முன் வீதியில் நூற்றுக்கும் மேற்பட்ட மரங்களை நாட்டினர்.

# லசந்த விக்கிரமதுங்க படுகொலை விவகாரம்; சாட்சிகளை மறைத்தமை குறித்து முன்னாள் ரி.ஐ.டி. பிரதானிகள் இருவருக்குச் சிக்கல்



(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை விவகாரத்தில் சாட்சிகள் மற்றும் விடயங்களை குறித்த கொலை தொடர்பில் முன்னர் விசாரணை செய்த ரி.ஐ.டி.எனப்படும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பிரதானிகள் இருவர் மறைத்ததாக விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

ரி.ஐ.டி.யின் முன்னாள் பிரதானி பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்ரா வாகிஸ்ட மற்றும் அப்போது அந்தப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக இருந்த பிரசன்ன அல்விஸ் ஆகியோர் இந்த நடவடிக்கையில் தொடர்புபட்டதாக தற்போது லசந்த விக்கிரமதுங்க படுகொலை விசாரணை செய்யும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கல்கிஸை நீதவான் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்தார்.

இந்நிலையில் குறித்த இரு ரி.ஐ.டி. முன்னாள் பிரதானிகள் தொடர்பிலும் விசேட விசாரணைகள் இடம்பெறுவதாகவும், ஏற்கனவே சாட்சிகளை மறைத்தமை தொடர்பில் கைதான கல்கிஸை பிராந்திய பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை இவர்கள் தொடர்பிலும் எடுக்கப்படும் வாய்ப்புள்ளதாக சி.ஐ.டியின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-7)

# அலுக்கோசு பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட இருவரின் இடமாற்றம் ரத்து

(கொழும்பு)

தூக்குத் தண்டனை வழங்குவதற்கான அலுக்கோசு பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட இருவரை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை சிறைச்சாலைகள் தலைமையகத்தால் நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேண்டுகோள் வெலிக்கடை சிறைச்சாலை நிர்வாகத்தால் விடுக்கப்பட்டது. அலுக்கோசு பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட இருவரும் தற்பொழுது சிறைச்சாலை தலைமையக காரியாலயத்தில் செயலக உதவியாளர் பொறுப்பில் கடமையாற்றிக் கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

மரண தண்டனை தற்போது நிறைவேற்றப்படாதுள்ளதால் தூக்குத் தண்டனை மற்றும் சித்திரவதை என்பவற்றுக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட இருவரையும் வெலிக்கடை சிறைச்சாலை கடமையில் ஈடுபடுத்த அதனை நிர்வாகம் தீர்மானம் எடுத்தது.

இருப்பினும், இந்த இருவரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றாதிருக்க சிறைச்சாலை தலைமையகம் தீர்மானம் எடுத்ததாகவும் தெரியவருகிறது. (இ-7)

# கடற்படையின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் தீப்பரவல்





(கொழும்பு)

கடற்படையினர் மற்றும் காலி தீயணைப்புப் பிரிவினர் ஒன்றாக இணைந்து நேற்று முன்தினம் காலி தெவட பகுதியில் கஜூவத்த விஹாரை அருகே மூன்று மாடி வீட்டில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தைக் கட்டுப்படுத்த உதவியுள்ளனர்.

வீட்டில் எரிவாயு கசிவு காரணமாக இந்தத் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. காலி அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மூலம் ஏற்பட்ட திடீர் தீ விபத்து தொடர்பாக கடற்படைத் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து கடற்படையின் தீயணைப்பு குழுவினர் ஸ்தலத்திற்கு விரைந்து செயற்பட்டனர். இதனால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டது. (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1851

Search for people, places and things

### வெங்கட்

சின்னவயதில் அம்மா தலையில் எண்ணெய் தேய்க்க வந்தால் ஓடுவோம்...! இப்போ கண்ட கண்ட எண்ணெயெல்லாம் வாங்கித் தேய்க்கிறோம் முடி உதிர்வைத் தடுக்க




### சரண்

தான் பெற்ற பிள்ளைகளிடம் காட்டிய கஞ்சத்தனத்தை பேரப்பிள்ளைகளிடம் காட்டுவதில்லை தாத்தாக்கள்



### ரவி

குறைவான வருமானமாக இருந்தாலும் அதை வைத்துக்கொண்டு நிம்மதியாக வாழ ஏற்ற இடம் சொந்த ஊர் மட்டும்தான்...



### மாறன்

மனிதனாக வாழ்வது சுலபம். ஆனால் மனிதாபிமானத்தோடு வாழ்வதுதான் கடினம்



### கிருஷ்ணா

ஜாதி மதம் தெரியாமல் பட்டாசு மூலம் எல்லா மதக் குழந்தைகளும் கொண்டாடும் ஒரே பண்டிகை தீபாவளி மட்டும்தான்




### கவிராஜ்

தலையைச் சீவியவனுக்கும் தண்ணீர் கொடுக்கிறது இளநீர்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தீருவிலில் பன்னிரு வேங்கைகளின் நினைவேந்தல்



குமரப்பா புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் 32 ஆம் ஆண்டு நினைவு வேந்தல் வல்வெட்டித்துறைத் தீருவிலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில் வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளர் கருணானந்தராஜா, நகரசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (படங்கள்: மகாலிங்கம்)

# விபத்தில் பெண் ஒருவர் பலி!

(புத்தளம்)

புத்தளம், குருநாகல் வீதியின் 3ஆம் கட்டைப் பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

புத்தளம், வில்லுவவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த ரஞ்சனி அபேசேகர (வயது 67) என்பவரே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை குருநாகல் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த குறித்த பெண் மீது மோதியதில் அவர் உயிரிழந்ததாக தெரியவருகிறது. (இ-7)

# இராணுவத்தினரைப் புகையிரத சாரதிகளாக பயிற்றுவிக்க அனுமதி- அபேசிங்க தகவல்

(கொழும்பு)

இன்று முதல் காரியாலய புகையிரதங்களைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பு இருப்பதாக அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார்.



இராணுவத்தினரைப் புகையிரத சாரதிகளாக பயிற்றுவிப்பதற்காக இராணுவத் தளபதி முன்வைத்த கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் அபேசிங்க தெரிவித்தார். (இ-7)

## ஆட்டம் ஆரம்பம்

# சஜித்தின் சுவரொட்டிகள் மீது கழிவு ஒயில் வீச்சு!



(சாய்ந்தமருது)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் மீது கழிவு ஒயில் வீசப்பட்டது.

சாய்ந்தமருது வீதியில் ஒட்டப்பட்டிருந்த குறித்த சுவரொட்டிகள் மீதே இவ்வாறு கழிவு எண்ணெய் வீசப்பட்டது.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் சுவரொட்டிகள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இடங்களில் ஒட்டப்பட்டன.

குறித்த சுவரொட்டிகள் தேர்தல் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 'புதிய இலங்கையை நோக்கி' எனும் தலைப்பில் ஒட்டப்பட்டன.

எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு முன்னணி வேட்பாளர்களின் படங்கள் உள்ளடங்கிய சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தனியார் பேருந்து-கனரக வாகனம் பாரிய விபத்து ; 12 பேர் படுகாயம்



(திருக்கோவில்)

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருக்கோவில் தாண்டியடி தங்கவேலாயுதபுரம் சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தனியார் பேருந்து கனரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் 12பேர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்து தொடர்பாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது பொத்துவில் நகரிலிருந்து கல்முனை நகர் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்து தங்கவேலாயுதபுரம் சந்தியில் கருங்கற்கள் ஏற்றிய நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த கனரக வாகனத்தின் பின்புறமாக மோதியது தெரியவந்தது.

குறித்த கனரக வாகனத்தின் பின்புற சில் வெடித்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் பொத்துவிலிருந்து பயணிகளை ஏற்றிவந்த தனியார் பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதி இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுவதுடன் பேருந்தின் முன்பகுதி பாரிய சேதமடைந்தது.

இதில் காயமடைந்தவர்கள் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து இரண்டு பெண்கள் உட்பட ஆறு பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

தனியார் பேருந்து மோதி கனரக வாகனம் சுமார் 15அடி தூரம் முன் தள்ளப்பட்டது. இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 120 | 130 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 240 | 210 | 300 |
| தக்காளி | 140 | 140 | 130 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 20 | 90 | 80 |
| கோவா | 160 | 120 | 120 | 80 | 160 |
| கரட் | 150 | 100 | 40 | 120 | 160 |
| பூசணி | 100 | 70 | 80 | 90 | 80 |
| புடோல் | 180 | 130 | 100 | 80 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 90 | 140 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 160 | 140 | 240 |
| பெரிய வெங்காயம் | 150 | 220 | 240 | 200 | 200 |
| பாகற்காய் | 350 | 200 | 100 | 260 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 100 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 180 | 180 | 180 | 180 | 140 |
| லீக்ஸ் | 140 | 80 | 100 | 80 | 120 |
| பீற்றூட் | 120 | 60 | 100 | 70 | 120 |
| கறிமிளகாய் | 200 | 240 | 180 | 130 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 200 | 150 | 200 |
| போஞ்சி | 250 | 200 | 200 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | — | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 60 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 300 | 400 | 300 | 260 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35 | 40 | 35 | 20-40 |
| இராசவள்ளி | — | — | 400 | 300 | — |
| வெங்காயப்பூ | 250 | 160 | — | — | 240 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 50 | 100 | 80 |

# கட்டுப்பணம் செலுத்தினார் ஹிஸ்புல்லா

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா கட்டுப்பணம் செலுத்தினார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தினார்.

சுயேட்சையாக போட்டியிடும் நோக்கிலேயே அவர் இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தினார்.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட அநீதிகளை உலகிற்கு எடுத்துக் கூறவே இவ்வாறு போட்டியிடத் தீர்மானித்ததாக ஹிஸ்புல்லா தெரிவித்தார்.



இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவுக்கு வந்தது.

இதற்கமைய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 41 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறுவர் அரங்கம்

## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2019

## புத்திசாலி உழவனும் போக்கிரிப் பூதமும்



உழைக்காமல் உண்ணலாம் என நினைத்த பூதத்தைத் தனது புத்திசாலித்தனத்தால் ஏமாற்றி வெற்றிகொண்டான் உழவன்.

ஓர் ஊரில் உழவன் ஒருவன் தன் நிலத்தில் பாடுபட்டுக் கொண்டிருந்தான். அப்போது திடீரென்று போக்கிரித்தனமான பூதம் ஒன்று தோன்றி "உழவனே! இந்தப் பகுதியிலுள்ள நிலமெல்லாம் என் முன்னோருக்குச் சொந்தமானவை. இது எனக்குரிய நிலமாகும். எனவே இதில் நீ என்ன விவசாயம் செய்தாலும் அதில் சரிபாதியை எனக்குக் கொடுத்தாக வேண்டும்'' என்றது.

பூதத்தைக் கண்டு பயந்த உழவன் முதலில் செய்வதறியாது திகைத்தான். பின்னர் திடீரென்று ஒரு யோசனை மின்னலிடவும் "எஜமானே உங்கள் விருப்பப்படியே அறுவடையில் சரிபாதியைத் தங்களுக்குக் கொடுத்துவிடுகிறேன்'' என்றான்.

அவ்வருடம் உருளைக் கிழங்கு பயிர்செய்ய எண்ணியதால் பூதத்திடம் "எஜமானே! இம்முறை நான் பூமிக்குக் கீழ் இருப்பதை எடுத்துக் கொள்கிறேன். தாங்கள் பூமிக்கு மேல் உள்ளவற்றை எடுத்துக் கொள்ளவும்'' என்றான்.

பூதம் "உம் ஜாக்கிரதை. நான் அறுவடையின் போது வந்து அவற்றை எடுத்துச் செல்கிறேன்'' என்று மிரட்டிவிட்டுச் சென்றுவிட்டது.

அறுவடைக்காலம் வந்தது. பூதமும் வந்தது. உழவன் பூமியின் கீழிருந்த உருளைக்கிழங்கு அனைத்தையும் தோண்டி எடுத்துக்கொண்டான்.


பூமிக்கு மேலுள்ள கொடிகளையும் இலைகளையும் எடுத்துச்சென்று என்ன செய்வது? இவை எனக்கு வேண்டாம். அடுத்த பயிரில் பூமிக்குக் கீழுள்ளவற்றைநான் எடுத்துக் கொள்வேன்; மேலுள்ளவற்றை நீஎடுத்துக்கொள்ள வேண்டும்; எனச் சொல்லிவிட்டுப் போய்விட்டது.

இம்முறை உழவன் நெல் பயிர் செய்தான். அறுவடைக்காலம் வந்தது. பூதமும் வந்தது. உழவன் நெல்லை அறுவடை செய்துகொண்டு "பூமியின்கீழுள்ளபாதியை நீ அறுவடை செய்து கொள்'' என்றான்.

பூமியின் கீழ் வெறும் வேர்கள்தான் இருந்தன. உழைக்காமல் உண்ணலாம் என எண்ணிய போக்கிரித்தனத்திற்காகப் பூதம் வெட்கித் தலைகுனிந்து ஓடிவிட்டது.

தன் புத்திசாலித்தனத்தால் உழவன் பூதத்தை வெற்றிகொண்டான்.

## பனிக்கட்டி நீரில் மிதப்பதேன்?



ஒரு கல்லையும் பனிக்கட்டியையும் நீரில் போட்டால் கல் நீருள் மூழ்கி அடிக்குச்சென்றுவிடும். ஆனால் பனிக்கட்டியோ நீரில் மூழ்காமல் மிதக்கும். கடலில் பெரிய மலைகளைப்போன்ற பனிப்பாறைகள் மிதந்து செல்வதுண்டு. பனிக்கட்டி நீருள் மூழ்கி விடாமல் மிதப்பது ஏன் என்பது உங்களுக்குத் தெரியுமா?

"ஆர்க்கிமெடிஸ்'' என்ற கிரேக்க விஞ்ஞானி முதன் முதலில் பொருட்களின் "மிதவை விதி"யைக் கண்டுபிடித்தார். இவ்விதியின் படி எப்பொருளையும் நீரில் இடும்போது அது இரண்டு விதமான விசைகளுக்கு உட்படுகிறது. அப்பொருளின் கனம் அதனைக் கீழ் நோக்கி அழுத்த மிதவைத் திறத்தால் அது மேலுக்கு உந்தப்படுகிறது. பொருளின் கனம் நீரின் உந்து விசைக்கு சமமாகவோ குறைவாகவோ இருந்தால் அப்பொருள் நீரில் மிதக்கும்.

அதாவது பொருளின் கனம் அப்பொருளால் தீக்கப்பட்ட நீரின் கனத்துக்கு அதிகமானால் அது நீரில் மூழ்கும். அது மிதக்கிறது என்றால் அதன் கனம், அதனால் உந்தப்பட்ட நீரின் கனத்தை விடக் குறைவானது. பொருளின் எடை அதே கன அளவுடைய நீரின் எடைக்குச் சரிபாதியாக இருக்குமானால் பொருளின் பாதி பாகம் நீருக்கு அடியிலும் மேற்பகுதி நீருக்கு வெளியிலும் காணப்படும். அதே போல் பொருளின் நிறை, அதனால் உந்தப்படும் நீரின் நிறைக்கு ஐந்தில் ஒரு பங்கு ஆனால் பொருளின் ஐந்தில் ஒரு பகுதி மட்டுமே நீருக்கடியில் இருக்கும்.

பொதுவாக திரவப்பொருள் திடப்பொருளாக மாறும் போது அது சுருங்கியது. ஏனெனில் திட நிலையில் அதனுடைய மூலக்கூறுகள் ஒன்றுக்கொன்று அருகாமையில் வருகின்றன. இதன் பயனாக அப்பொருளின் பருமனளவு குறைந்து செறிவு அதிகமாகிறது. ஆகவேதான் திடப்பொருள், திரவத்தைவிட அதிகக்கனமாக இருக்கிறது. ஆனால் தண்ணீர் ஒரு விந்தையான திரவம். நீர் பனிக்கட்டியாக மாறும்போது சுருங்குவதற்குப்பதில் விரிவடைகிறது. பனிக்கட்டியின் பருமனளவு, நீரின் பருமனளவை விட அதிகரிக்கிறது. நீருடன் ஒப்பிடும்போது பனிக்கட்டி 9/10 பங்கு கனமானது. அதாவது 9 லீற்றர் தண்ணீரை உறையச் செய்தால் 10 லீற்றர் ஐஸ் கிடைக்கும். பனிக்கட்டியின் பருமனளவு அதிகமாவதால் அதன் செறிவு தண்ணீருடன் ஒப்பிடும்போது 9/10 ஆகிறது. இவ்வாறு பனிக்கட்டியின் கனம் நீரை விடக் குறைகிறது.

ஆகவேதான் பனிக்கட்டியின் 9/10 பகுதி நீருக்கு அடியில் மூழ்கியும் 1/10 பகுதி நீருக்கு மேல் மிதந்தும் காணப்படுகிறது. ஆர்க்கிமெடிஸின் மிதவை விதிப்படி நீருக்கடியிலுள்ள பனிக்கட்டி அதாவது 9/10 பகுதி பனிக்கட்டி முழு அளவு பனிக்கட்டிக்கு ஒப்பான எடையுள்ள நீரை உந்துகிறது. பனிக்கட்டியின் ஒரு சிறு பகுதியாகிய 1/10 பகுதி மிதக்க பெரும் பகுதி நீருக்கடியில் அமிழ்ந்திருப்பதற்கான விளக்கம் இதுதான்.



சு.ஜோகஸ்மி, தரம் 1 ஏ,
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

## அரசே போற்றி

அரசர்க் கரசே அரசே போற்றி
ஆதி முதல்வா அரசே போற்றி
இன்னல் களையும் அரசே போற்றி
ஈகைத் தருவே அரசே போற்றி

உண்மை நீயே அரசே போற்றி
ஊன் உருவிலா அரசே போற்றி
எனையாள் பரம்பொருளே அரசே போற்றி
ஏழைக் கருளும் அரசே போற்றி

ஐயனே நேசனே அரசே போற்றி
ஒன்றென்ற பொருளே அரசே போற்றி
ஓய்வின்றி இயங்கும் அரசே போற்றி
ஔஷத மாமருந்தே அரசே போற்றி

நாம் முன்னேற்றப் பாதையில்
செல்வதே நம்மவர்களையும்
முன்னேறச் செய்ய சிறந்த வழி. - ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# யார் குற்றியேனும் அரிசி கிடைக்கட்டும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளை அழைத்து ஆராய்ந்துள்ளது. இது கடந்த 5ஆம் திகதி இடம்பெற்றது.

ஏலவே மதத் தலைவர்கள், புத்திஜீவிகள், அரசியல் ஆய்வாளர்களைக் கொண்ட சுயாதீனக்குழு; தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்குச் சாதகமான ஒரு முடிவை அனைவரும் ஏகமனதாக எடுத்துக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் அந்த முயற்சிகளைக் கடந்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அவசர அவசரமாக தமிழ் அரசியல் கட்சிகளை அழைத்துச் சந்திப்பை நடத்தியுள்ளது.

இது தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

சின்மயா மிசன் சுவாமிகள், யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர், திருகோணமலை மறைமாவட்ட ஆயர், தென்கயிலை ஆதீன சுவாமிகள் என மதிப்புக்குரிய சமயத் தலைவர்களையும் பொதுமை நிலையில் உள்ள புத்திஜீவிகள், அரசியல் ஆய்வாளர்களையும் உள்ளடக்கியதான சுயாதீனக்குழுவின் முயற்சியை தடுத்து நிறுத்துவதற்காக, ஓர் அரசியல் கட்சியின் ஏற்பாட்டிலேயே யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்போந்த அவசர நடவடிக்கையில் ஈடுபட்டது என ஒரு தரப்பினர் கூறிக் கொள்கின்றனர்.

தவிர, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முயற்சி நல்லது. ஆனால் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய ஒரு சில மாணவர்கள், அரசியல் கட்சிகளில் தங்களுக்கு இடத் தைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு முயற்சியின் பின்னணியில்தான் இந்த ஏற்பாடு என்று குறைபடுவோர்,

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் ஏலவே இருந்தவர்கள் பின்னர் அரசியல் கட்சிகளில் இணைந்துள்ளனர் என்றும் இப்போது இருக்கின்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் தாங்கள் எந்த அரசியல் கட்சியிலும் சேர மாட்டோம் என்ற உத்தரவாதத்தை முன்வைப்பார்களா? என்ற கேள்வியையும் தொடுத்துள்ளனர்.

இவைதான் என்றால்; கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தெரிவிக்காமல், கிழக்கிலுள்ள அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் எவரும் இடம்பெறாத வகையில் செய்யப்பட்ட சந்திப்பானது கிழக்குத் தமிழ் மக்களை ஓரங்கட்டுகின்ற நடவடிக்கை என்றும் பலவாறான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

எம்மைப் பொறுத்தவரை எழுந்த விமர்சனங்களை ஆற்றுப்படுத்தும் அதேவேளை எம் தமிழினம் வாழ்வதற்காக யாராயினும் ஏதேனும் செய்ய வேண்டும் என்பதுதான்.

சுயாதீனக்குழுவின் முயற்சிகளை முறியடிக்கும் வகையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் செயற்பட்டது என்ற விமர்சனத்தை நிராகரிக்க முடியாதாயினும்,

யார் குற்றியேனும் அரிசி கிடைத்தாக வேண்டும் என்ற அடிப்படையில், எங்கள் தமிழினம் வாழ வேண்டும். எங்கள் இனத்துக்கு நேர்ந்த அவலங்கள் நீங்கி எம் மக்கள் சுதந்திரமாக வாழுகின்ற சூழல் உருவாக வேண்டும்.

இந்தப் பணியில் யார் ஈடுபட்டாலும் அதனை ஆதரிப்பதும் வரவேற்பதும் நம் அனைவரதும் கடமையாகும்.

# சஜித்தின் ஆட்சியில் மலையகத்துக்கு ஜனாதிபதி செயலணி- மனோ

(ஹற்றன்)

சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் மலையக மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடிய ஜனாதிபதி செயலணி அமைக்கப்படும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

'சஜித்துடன் நாட்டை வெற்றி கொள்ளும் போராட்டம்' எனும் தொனிப் பொருளில் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து ஹற்றனில் நேற்று நடத்திய முதலாவது பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இன்று வடக்கில் மாத்திரமே ஜனாதிபதி செயலணி ஒன்று உள்ளது. ஆனால் நாங்கள் சஜித்திடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய அவர் அதனை ஏற்றுக்கொண்டார்.

இன்று பலர் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் வேற்றுமைகளை ஏற்படுத்தி அரசியல் செய்ய முயற்சி செய்கிறார்கள். இவற்றையெல்லாம் முறியடித்து நாம் மலையக பகுதியில் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும். அதற்கு சிறந்த தலைவர் சஜித் பிரேமதாஸ தான். எனவே அவரை வெற்றி பெறச் செய்வதற்கு வழி செய்ய வேண்டும்.

எதிர் காலத்தில் மலையகத்தில் வீடுகளை வழங்கும் போது ஒரு வீட்டில் மூன்று நான்கு குடும்பங்கள் இருந்தால் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனி வீடுகள் பெற்றுக் கொடுக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் மக்கள் இராஜதந்திர ரீதியிலான தீர்மானமொன்றை எடுக்க வேண்டும்

(ஏறாவூர்)

தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், வெற்றி பெறக்கூடிய ஒரு வேட்பாளருக்கு வாக்களித்து இராஜதந்திர ரீதியிலான தீர்மானமொன்றை எடுக்க வேண்டுமென கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தற்போது இலங்கையில் மீண்டுமொரு தேர்தல் களம் சூடுபிடித்திருக்கின்றது. பல கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தங்களது ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களை அறிமுகம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களை பொறுத்தவரை ஜனாதிபதி தேர்தலானது தங்களுக்கு வேண்டாத தேர்தலாக கருதக்கூடிய நிலையில் உள்ளனர்.

மேலும் தமிழ் மக்களின் போராட்டம் அரசியல் அபிலாஷைகள் போன்றவற்றிற்கு தீனிபோடக் கூடிய தேர்தலாகத்தான் நாங்கள் இதனை பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உள்ளத்தில் ஒழுங்கு முற்றிலும் குறைந்திருந்தால் நாம் புறத்தில் எதையும் நிலைநாட்ட முடியாது. -ஷேக்ஸ்பியர்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில் கொழும்புத்துறை ஒரு பகுதி, நெடுங்குளம், ஒரு பகுதி, உதயபுரம், மணியம்தோட்டம், மணியம் தோட்டம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் பாலம்பிட்டி, தட்சணாமருதமடு, தட்சணாமருதமடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## நவராத்திரி பாமாலை

கல்விக்கு இன்று மூன்றாம் நாள்



### தாயே கலைவாணி

தாயே கலைவாணி– உந்தன்
தாள் பணிந்தோம் தாயே
நாயாய் அலையாமல்– எமை
தாயே காத்தருள்வாய்


ஞானம் தன்னை தருபவளே இந்த
நானிலம் போற்றும் தூயவளே
பழகு தமிழில் உறைபவளே– எங்கள்
பாவம் தீக்கும் கலைமகளே

வெள்ளைக் கமலமுன் அரியணை– இனி
வேறில்லை நீயின்றியோர் துணை
உள்ளம் தினம் பாடவுன் புகழ்– நீ
அள்ளித் தரவேண்டுமுன் நல்லருள்

கே.தவராஜசுந்தரம்
கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பிரவிர்த்தி -நிவர்த்தி மார்க்கங்கள்



பெரும்பாலோர் வாழ்வில் இன்பம், துன்பம் இந்த இரண்டில், ஒன்றை மாற்றி ஒன்றை அனுபவித்து வருகிறோம். இந்த இன்ப, துன்பங்கள் எவ்வாறு உண்டாகின்றன என்று ஆராய்ந்தால் இரண்டு விதமான உணர்ச்சிகள் தான் நமக்குத் தெரியும். ஆனால், இன்னொரு உணர்ச்சி இருக்கின்றது. அதற்குப் பெயர் அமைதி அல்லது சம உணர்வு என்பது. அமைதியான உணர்விலிருந்து சிறிது ஊக்குவித்தலினால் ஏற்படுகிற உணர்வுதான் இன்பம். இந்த ஊக்குவித்தலினால் அணு அடுக்குச் சிதைவு ஏற்பட்டு, உயிர்ச்சக்திக்கு அழிவு ஏற்படுகின்ற காலத்தில் அதுவே துன்பமாக மாறுகிறது. அமைதி நிலையில் (Normal) இருக்கின்றபோது அதைச் "சத்துவகுணம்" என்று கூறுவார்கள். அப்போது மனமானது நல்ல எண்ணத்தோடு தெய்வீக நிலையில் இருக்கிறது. அமைதி நிலையிலிருந்த உணர்வு ஊக்குவிக்கப்பட்டு ஏதோ ஒன்றை அனுபவிக்கும்போது ஏற்படும் இன்பம் இருக்கிறதே அதை "ரஜோ குணம்" என்றும் அதற்கு மேலே துன்பப்படுகின்ற அளவுக்கு இயக்கமும், செயலும், வேகமும் உண்டாகின்ற போது "தமோகுணம்" என்றும் பிரித்துச் சொல்லப்படுகின்றது.

நாம் பெரும்பாலும் இன்ப, துன்பம் என்ற இரண்டையும் உணர்ந்துள்ளோம். ஆனால், அமைதி என்ற ஒரு நிலை உண்டு. அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பசி எடுக்கிறது. அது துன்பமாக உணரப்படுகிறது. அந்தப் பசியை உணவினாலே நீக்கிக் கொள்ளுகின்றோமே அது இன்பம். துன்பத்திலிருந்து மீட்டுக் கொள்ளும் ஒரு இதம் இருக்கின்றதல்லவா? அதை இன்பமாகத் தான் கொள்ள வேண்டும். இப்போது பசி நீங்கிவிட்டது. இன்பமும் இல்லை. துன்பமும் இல்லை. அந்த இடத்திலே அமைதி இருக்கிறது. அதுதான் (Normal) அமைதி என்பது. இனபமும் அற்று, துன்பமும் அற்று அறிவு, மனம், உடல் என்ற நிலையிலே இருப்பது தான் அமைதி. இந்த அமைதி நிலைக்கு வருகின்றபோது தான் அறிவு தன்நிலை நாடித் தன்னோடு, தன்னுடைய முழுமையில் இணைகின்றது. அப்படித் தன் நிலையில் இல்லாமல் இருந்தால் முழுமை நிலை, பகுதி நிலை என்று இரண்டு பிரிவாகி அந்த இடத்தில்தான் "தன்முனைப்பு" (Ego) உண்டாகிறது. உணர்ச்சி வயப்பட்ட நிலையில் தான் முனைப்பு உண்டாகின்றது. அங்கு பலவிதமான முரட்டுச் செயல்களும், நோய்களும், தீச்செயல் பதிவுகளும் உண்டாகின்றன. தன்முனைப்பை மாற்றி வாழ்வோம்.

# வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக் உதைபந்தாட்டம் சம்பியன் பட்டத்தை வென்றது ரில்கோ கொங்கியூரஸ்



பிரமாண்டமான முறையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வட-கிழக்கு பிறீமியர் லீக் தொடரின் இறுதி ஆட்டத்தில் தனேஸ் தலைமையிலான ரில்கோ கொங்கியூரஸ் அணியை எதிர்த்து ஞானரூபன் தலைமையிலான வல்வை எப்.சி . அணி மோதியது.

பெருந்திரளான ரசிகர்கள் மத்தியில் ஆரம்பமான இப் போட்டி இறுதி ஆட்டத்திற்கு உரிய விதத்தில் ஆரம்பம் முதல் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது ரில்கோ கொங்கியூரஸ் அணியின் நட்சத்திர வீரர் இவான்ஸ் பந்தை கடத்தி சென்று அதை தனேஸ் சிடம் வழங்க அப் பந்தை இலாவகமாக கோலாக மாற்றி வல்வை அணிக்கு அதிர்ச்சி கொடுத்தார் தனேஸ்.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை கோலாக மாற்ற தவற முதல் பாதி ஆட்டத்தில் 01:00 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது ரில்கோ கொங்கியூரஸ் அணி.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஆட்டத்தை வேகப்படுத்தியது வல்வை எப்.சி அணி.

இதன் போது எதிரணி முறையற்ற விதமாக வெளிப்படுத்திய ஆட்டத்தின் பயனாக கிடைத்த உதையினை ஞானரூபன் உதைக்க அப் பந்து ரில்கோ கொங்கியூரஸ் அணியின் கோல் காப்பாளரால் தடுக்கப்பட அருகில் இருந்த வீரர் இக்னி அதனை கோலாக மாற்றி ஆட்டத்தை சமநிலைப் படுத்தினார்.

தொடர்ந்தும் நடைபெற்ற ஆட்டத்தில் மேலதிக கோல்கள் எதுவும் பெறப்படாத நிலையில் ஆட்டம் 01:01 என சமநிலையில் நிறைவு பெற்றது.

இதனால் வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் ரில்கோ கொங்கியூரஸ் அணி வெற்றி பெற்று இரண்டாவது தடவையாக வட-கிழக்கு பிறீமியர் லீக் தொடர் கிண்ணத்தை சுவீகரித்தது. (க)

# உதைபந்தாட்ட இறுதிப்போட்டியும் கலாசாரப் போட்டிகளும் இன்று

பாதுகாப்பான புலம்பெயர்வு வாரத்தினை ஒட்டி புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பினால் (ஐ.ஓ.எம்) நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும், கலாசார போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இன்று திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

பொது மக்களிடையே பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கடந்த மாதம் 21ஆம் திகதி முதல் கிராமிய, பிரதேச, மாவட்ட மட்டங்களில் பல்வேறு செயற்றிட்டங்களை ஐ.ஓ.எம் நிறுவனம் முன்னெடுத்திருந்தது.

அந்த வகையில் நடத்தப்பட்ட பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகள், ஓவியப்போட்டி, குறும்படப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும் அன்றைய தினம் நடைபெறவுள்ளது.

மாவட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் வெற்றிபெறும் அணிக்கும் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட அணிக்கும் இடையில் காட்சி உதைபந்தாட்டமும் இடம் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# பரபரப்பான ஆட்டத்தில் வென்றது சாவற்காடு கில்லறி அணி



சாவற்காடு கில்லறி விளையாட்டுக்கழகம் தனது 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தி வருகின்ற கில்லறி கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சாவற்காடு கில்லறி அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் கில்லறி அணி வெற்றி பெற்றது. (க)



**வடமாகாண கராத்தே போட்டி அண்மையில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து 1000 இற்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் பங்கு பற்றியிருந்தார்கள். இதில் Jaffna Karate School (J.K.S)(JKFSKDS) கழக மாணவ, மாணவியர் 39 தங்கம், 26 வெள்ளி , 20 வெண்கலம் என மொத்தமாக 85 பதங்கங்களை வென்று தேசிய கராத்தே சுற்றுப்போட்டிக்கு தெரிவாகியுள்ளார்கள். (க)**

# பூநகரி லீக் வெற்றிக் கிண்ணம் நாச்சிக்குடா சென்.மேரீஸ் வசம்



நேற்று முன்தினம் நடைபெற்ற பூநகரி லீக் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரீஸ் அணியை எதிர்த்து வேரவில் கலைமகள் அணி மோதியது. இப் போட்டியின் ஆட்ட நேர முடிவில் 03:02 என்ற கோல் கணக்கில் நாச்சிக்குடா சென். மேரீஸ் அணி வெற்றி பெற்று சம்பியனானது. (க-299)

# வவுனியாவில் அகில இலங்கை ரீதியில் கராத்தே சுற்றுப் போட்டி





நிப்பொன் கன்செக்கே கராட்டி சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பம்ஸ்பமடுவில் அமைந்துள்ள வவுனியா வளாக உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இந்த கராத்தே சுற்றுப் போட்டியில் நுவரெலியா, கண்டி, கொழும்பு, மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியாவை சேர்ந்த கராத்தே மாணவர்கள் பங்குபற்றுகின்றனர்.

சிகான் ஐ.அசனார் சென்சியின் தலைமையில் இடம் பெறும் இச்சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றிச்சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வவுனியா உதவி மாவட்ட செயலாளர் கமலதாஸன் மற்றும் கராத்தே ஆசிரியர்கள், நடுவர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (க-299)

## கோத்தபாய ராஜபக்சவின் குடி...

யீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் யசந்த கோத்தாகொட தலைமையிலான மூன்று நீதியரசர்கள் குழு அந்த மனுவை தள்ளுபடி செய்தது.

இந்தநிலையில், கோத்தபாய ராஜபக்சவின் குடியுரிமையை சவாலுக்குட்படுத்தி மனுத்தாக்கல் செய்த சிவில் செயற்பாட்டாளர்களான காமினி வியாங்கொட மற்றும் பேராசிரியர் சந்ரகுப்த தெனுவர ஆகியோருக்கு நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும், சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் கோத்தாபய ராஜபக்சவின் ஆதரவாளர்கள் கொலை அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர்.

நீதிமன்ற தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின்னர், தனக்கும், பேராசிரியர் தெனுவரவுக்கும் எதிரான அச்சுறுத் தல்கள் அதிகரித்துள்ளதாக காமினி வியாங்கொட தெரிவித்தார்.

தொலைபேசி மூலம் தனக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாகவும், சமூக ஊடகங்களில் அவதூறுகள், அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஒரு சமூக ஊடகப் பதிவில், எம்மை கொலை செய்ய முன்னர் சித்திரவதை செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதுபோலவே, தெனுவரவுக்கும், தொலைபேசி மூலம் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும், வீதியில் நடந்து செல்லும் போது கூச்சலிட்டு அச்சுறுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

தேவைப்பட்டால், தாங்கள் பொலிஸ் பாதுகாப்பை கோருவோம் என்றும் காமினி வியாங்கொட தெரிவித்துள்ளார்.

தன்னை எதிர்ப்பவர்களுக்கு கோத்தபாய ராஜபக்ச பல பாடங்களைக் கற்பித்திருக்கிறார் என்றும், லசந்த விக்ரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட, போத்தல ஜயந்த, கீத் நொயார் போன்றவர்களுக்கு நடந்தது அதற்கான உதாரணங்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஞா)

## பொஸ்கோவில்...

றைப் பெற்றுள்ளனர் என்று கல்லூரியின் அதிபர் தெரிவித்தார்.

அத்தோடு மாணவன் கேசவன் தர்சன் 194 புள்ளிகளைப் பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார் என்றும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

கடந்த வருடம் 50 வீதமான மாணவர்கள் சித்தி அடைந்தனர். எனினும் இம்முறை 66 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என்றும் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர் தெரிவித்தார். (ஞா)

## மொட்டு சின்னத்திலே போட்...

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தாபய ராஜபக்ஷ நேற்றுக் காலை 9 மணியளவிலான சுப நேரத்தில்வேட்பு மனுவில் கையெழுத்திட்டுள்ளார்.

மிரிஹான இல்லத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் உள்ளிட்ட பௌத்த மதகுருமார்களினால் மேற்கொள்ளப்பட்ட வழிபாடுகளுடன் கோத்தபாய பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்துடன் வேட்புமனுவில் கையெழுத்திட்டார்.

இந் நிகழ்வின் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார். பொதுஜன பெரமுன கட்சி சார்பில் தாமரை மொட்டு சின்னத்தில் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராகக் கட்டுப்பணம் செலுத்தியிருக்கிறார். இந்நிலையில் சின்னத்தை மாற்றுவதென்றால் அதற்கு சட்ட ரீதியான முறைமைகள் இருக்கின்றன. இதனை நீதிமன்றத்தினூடாகவே அனுக முடியும்.

எனவே நாம் தாமரை மொட்டு சின்னத்திலேயே போட்டியிடுவோம். பாரிய வெற்றியும் பெறுவோம். ஏற்கனவே உள்ளூராட்சி தேர்தலில் இதே சின்னத்தில் வெற்றி பெற்று காண்பித்துள்ளோம். மொட்டு எமக்கு வெற்றியீட்டக் கூடிய இராசியான சின்னமாகும் என்றும் கூறினார். (ஞா)

## நிபந்தனையின்றி கோத்தாவை...

களை மேற்கொள்ளவுள்ளது. முதலாவது சு.க - கோத்தபாய ராஜபக்ச இடையேயான ஒப்பந்தம். அடுத்தது சு.க - பெரமுன இடையேயான ஒப்பந்தம்.

முதலாவது ஒப்பந்தம் கோத்தபாயவின் மீரிஹனவிலுள்ள இல்லத்தில் கையெழுத்தாகவுள்ளது.

மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச, பசில் ராஜபக்சவுடனான கலந்துரையாடலின் பின்னர், மைத்திரி இந்த முடிவிற்கு வந்துள்ளார்.

நேற்று முன்தினம் சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு கூடியபோது, கோத்தபாயவிற்காக அரசியல் பிரசாரத்தில் ஈடுபடுவதென முடிவாகியுள்ளது. சு.க - பெரமுன ஒப்பந்தத்தில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள், கட்சியால் பரிந்துரைக்கப்படும் யோசனைகளில் இறுதிநேர திருத்தம் மேற்கொண்டு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட 'மத்தியகுழு நேற்று ஜனாதிபதிக்கு அனுமதியளித்தது.

சு.க- பெரமுன ஒப்பந்தத்தில் எதிர்கால தேர்தல்களில் பொதுவான சின்னத்தில் களமிறங்குவது, வேட்பாளர்களை தேர்ந்தெடுப்பது உள்ளிட்ட விவகாரங்கள் உள்ளடங்கியிருக்கும்.

இது வரும் ஒக்ரோபர் 9ம் திகதி, கோத்தபாயவின் முதலாவது தேர்தல் பிரசாரம் அநுராதபுரத்தில் நடைபெறும்போது கையெழுத்தாகும். அன்றையதினமே, பெரமுனவின் கூட்டணி கட்சிகளிற்கிடையிலான ஒப்பந்தமும் கைச்சாத்தாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோத்தபாயவின் குடியுரிமை வழக்கில், தீர்ப்பு அவருக்கு எதிராக அமையலாமென கருதியதாலேயே, தீர்ப்பு வரும்வரை மைத்திரிபால சிறிசேன இழுத்தடிப்பை மேற்கொண்டுள்ளார்.

கோத்தபாயவிற்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டால், தான் களமிறங்கலாமென்ற யோசனையில் அவர் இருந்ததாக தெரிகிறது. எனினும், நீதிமன்ற தீர்ப்பு கோத்தபாயவிற்கு சாதகமாக அமைந்ததால் அவர் இறுதிநேரத்தில் முடிவை மாற்றியுள்ளார். (ஞா)

## கணவன்...

குழுவினர். சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக பொலிஸாருக்கு ஏன் தகவல் வழங்கினீர்கள் என கேட்டு அங்கு இருந்த கணவன் மனைவி மீது பொல்லுகள், கம்பிகள் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கணவன் மனைவியின் கூக்குரல் கேட்டு சென்ற ஆட்டோ சாரதியை தாக்கியதுடன் ஆட்டோவையும் சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

படுகாயங்களுக்குள்ளான கணவன் மனைவியை மீட்ட ஊர்மக்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், ஆட்டோ சாரதியை தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கோண்டுள்ளனர். (ஞா-9.316)

## புலமைப்பரி...

பெற்று வடமாகாணத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். இதேவேளை யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன் கேசவன் தர்சன் 194 புள்ளிகளையும் கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலய மாணவன் இராசலிங்கம் கேதுசனன் 194 புள்ளிகளையும் பெற்று 2ஆம் இடத்திலும் யாழ். பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய மாணவன் ஜெறோம் யோய்சன் 193 புள்ளிகளையும் பெற்றுள்ளதுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து முல்லைத்தீவு விசுவமடு விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை மாணவன் ரகுதனன் அபினயன் 193 புள்ளிகளையும் பெற்று வடமாகாணத்தில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்திலிருந்து வவுனியா புதுக்குளம் கனிஸ்ட வித்தியாலய மாணவி தரணியா - விவேகானந்தராசா 192 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இதேவேளை யாழ்.பொஸ்கோ வித்தியாலயத்தில் 171 மாணவர்களும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில்160 மாணவர்களும்யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 92 மாணவர்களும் சித்தி பெற்றுள்ளனர் (ஞா-10,281,250,315)

## செலவினங்களை...

அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு இந்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என குறித்த சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் அவசியமற்ற திட்டங்கள் மற்றும் ஆரம்பிக்கப்படாத திட்டங்களை ஆரம்பிக்க வேண்டாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தளபாடங்கள் மற்றும் வாகனங்களை கொள்வனவு செய்வதையும் தவிர்க்குமாறு இதன்போது கோரப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் மற்றும் மத நிகழ்வுகளுக்கு உதவித் தொகை வழங்குவதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என குறித்த சுற்றறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. (ஞா)

## தந்தையை...

தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனநாயகமானதும் சுதந்திரமானதுமான நாட்டை ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே கட்டியெழுப்ப முடியும். மகிந்த - கோத்தா ஆட்சிக் காலத்தில் இவை இரண்டுமே காணப்படவில்லை. அவர்களது கொடுமையான ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்டவர்களில் நானும் உள்ளடங்குகின்றேன்.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் நிலைமை எவ்வாறு இருந்தது என்பதை நினைவுபடுத்த வேண்டியுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ பற்றி வீட்டுக்குள் கதைப்பதற்கும் மக்கள் பயந்தனர்.

சாதாரண மக்கள் மாத்திரமின்றி ஊடகங்களுக்கோ ஊடகவியலாளர்களுக்கோ எவ்வித சுதந்திரமும் காணப்படவில்லை. (ஞா)

## 41 வேட்பாளர்...

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று நண்பகல் 12.00 மணியுடன் முடிவடைந்தது.

ஏற்கனவே 33 வேட்பாளர்கள் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருந்த நிலையில், நேற்று மேலும் 14 வேட்பாளர்கள் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதையடுத்து, கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை 41 ஆக அதிகரித்துள்ளது.

இன்று காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை வேட்புமனுத் தாக்கல் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் மிக அதிகபட்ச வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தலாக இது அமையவுள்ளது. (ஞா)

## ஜனாதிபதித் தேர்...

மற்றும் பொறுப்புகள் குறித்தும் அறிவிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

அதேபோன்று ஜனாதிபதித் தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்து வதற்கான கால எல்லை நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

இதேவேளை, நேற்றும் இன்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தை அண்மித்து விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் நடை முறைப் படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (ஞா)

## குடும்பஸ்தர்...

இந்தச் சம்பவம் புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.40 மணிக்கு இடம்பெற்றது.

சம்பவத்தில் நல்லதம்பி இராசகுமாரன் (வயது -44) என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து பாரவூர்திச் சாரதி கைது செய்யப்பட்டதுடன் பாரவூர்தியும் பொலிஸில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் மாஞ்சோலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஞா)






















**பயண முகவர் தேவை**

Air Tickecting இல் அனுபவமுள்ள பயண முகவர் தேவை
தொடர்புகளுக்கு, SB Travels and Tours Pvt Ltd
No 212, Kasthuriyar Road, Jaffna. 0212229555
(C-7805)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(9946)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 021 567 1532

**SB travels and tours pvt Ltd**

- சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- இந்தியா, மலேசியா, பாங்கோக் நாடுகளுக்கான வீசாக்களையும் எமது நிறுவனத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.
- இந்தியா வீசா விண்ணப்பப்படிவம் ரூபாய் 100/- நிரப்பித் தரப்படும்
- இந்தியா E – வீசா வினையும் ( E– Visa ) பெற்றுக் கொள்ளலாம் மற்றும் Schengan Visa விண்ணப்பப்படிவமும் நிரப்பித் தரப்படும்.
- சென்னைக்கு 23800/= ரூபாவில் இருந்து இரு வழி விமான பயணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு இல 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0212229555, 0212228555 / 0766911080, 0766911082
வெள்ளவத்தை – 0112361711 / கொழும்பு 15 - 0112540111
(C-7805)

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK – 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS
0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • கொடிகாமம் • வல்வெட்டித்துறை • பருத்தித்துறை • மானிப்பாய் • திருகோணமலை • சாவகச்சேரி • சுன்னாகம் • மருதங்கேணி
V2 TRAVELS
(C-7539)

**அமெரிக்க லொத்தர் விசா**

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் 02-10-2019 தொடக்கம் 05-11-2019 வரை
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதிர்கள்!

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 | 0764550673 |
| மானிப்பாய் | சுன்னாகம் | கொடிகாமம் | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை | மருதங்கேணி |
| 0768226238 | 0764550670 | 0764550675 | 0768226230 | 0776697960 | 0764550671 |

V2 Travels www.facebook.com/v2tandt

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-7804)

இந்தியன் செலக்ஷனின் தீபாவளி ஆடைத் திருவிழா
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
05.10.2019 தொடக்கம் 28.10.2019 வரை
திருமணப் பட்டுப்புடைவைகளின் பூங்காவனம்

**இந்தியன் செலக்ஷனின்**

கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச்சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T - சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புறொக்ஸ்,
என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்...
புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்
கொள்வனவு செய்யும் பெறுமதிக்கேற்ப விலைக் கழிவுகளைப் பெற்றிடுங்கள்
GIFT VOUCHER
ரூபா 15000ற்கு மேல் - 1000/-
ரூபா 20000ற்கு மேல் - 1500/-
ரூபா 30000ற்கு மேல் - 2000/-
ரூபா 40000ற்கு மேல் 3000/-
இப்பரிசுக் கூப்பனுடன் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
(C-7797) இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்


# மரண அறிவித்தல்



## கணபதி திருநாவுக்கரசு

மலர்வு 28-07-1932 | உதிர்வு 04-10-2019

வேலணை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதி திருநாவுக்கரசு கடந்த (04.10.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - பாக்கிய லெட்சுமி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான சபாபதி - அன்னமுத்து தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற அன்னலெட்சுமியின் அன்புக் கணவரும் நிமலன் (லண்டன்), கமலினி (யாழ். ப.நோ.கூ. சங்கம்), கேதீஸ்வரி (ஆசிரியை - சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சியாமினி, சதா - வேல்மாறன் (மிருதங்க வித்துவான்), ஸ்ரீகாந்தன் (சர்வோதயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருமதி,சாரங்கி, சாம்பவி, சதுர்சன், தீபிகா, சங்கவி, அமிர்தினி ஆகியோரின் பாசமிகு பேரனாரும், காலஞ்சென்ற நல்லையா மற்றும் நவரத்தினம் (ஓய்வுநிலை தபாலதிபர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற அருளாம்பிகை மற்றும் கலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராஜ இராஜேஸ்வரியின் அன்புச் சித்தப்பாவும் அமரர் வசந்தன் மற்றும் ஜெயந்தன், முகுந்தன் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 82/4, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இன்று (07.10.2019) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

82/4, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்
0212217735 (மகள்), 0115747793 (சகோதரன்), 0779173947 (மருமகன்)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.